மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ.

மணி 2 | 20—12—59 ஒலி 8

இரண்டே ஆண்டில்

1962 !

நமது மதிப்பிற்குரிய மேன்மை தங்கிய கவர்னர் பிரான் அவர்கள் சம்பிரா‌தயப்படி இவ்வாண்டும் சட்ட சபையில் நீண்டதொரு சொற்பொழிவாற்றி இருக்கிறார்.

மேல் சபை, கீழ் சபை கூட்டு கூட்டத்தில் அவர் ஆற்றிய பெரும் சொற்பொழிவை பல முறை படித்தோம், திரும்பத்திரும்பப்படித்தோம்! "வரண்டவாழ்வுக்கு வளம் கிடைக்குமா?" இருண்டு கிடக்கும் தமிழகத்திற்கு ஒளிவருமா? என்ற ஆவலோடு மீண்டும் புரட்டினோம்! ஒருக் கணம் திகைத்து அப்படியே உட்கார்ந்து விட்டோம்!

அவருடைய சொற்பொழிவிலே ஏழைகளைக் காண முடியவில்லை. எளியவரின் துயர் துடைக்கும் மார்க்கம் சொல்லப்படவில்லை! ஏதோ சம்பிரதாயத்திற்காக அவர் பேசி இருக்கிறார் என்று தான் நினைக்க வேண்டி இருக்கிறது!

கவர்னர் உரை மீது ஆளும் கட்சி உறுப்பினர்களும் ஆளப் போகும் கட்சி உறுப்பினர்களும் சொற்பொழிவாற்றி தங்கள் தங்கள் கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள்! ஆளும் கட்சி உறுப்பினர்களில் பலர் சர்க்கார் மீது பலமான குற்றச் சாட்டுகளைச் சுமத்தி இருக்கிறார்கள்! என்றாலும் அவர்கள் முடிவுரையை புகழுரையாகவே முடித்திருக்கிறார்கள்!

அறிஞர் அண்ணா அவர்கள் இந்த மாநில சர்க்காரின் நிலையைப் பற்றித் தெளிவாக எடுத்துரைத்துப் பேசி இருக்கிறார்கள்!

"விலைவாசியை குறைக்க வழி தேட வேண்டுமா?" டில்லியை கேட்டிருக்கிறோம்!

"உச்சவரம்பு பிரச்னையா? டில்லியை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்!"

"உற்பத்தியைப் பெருக்க உரம் கிடைக்கவில்லையே? அது ஏன் என்று கேட்டால்" "டில்லியை கேட்டுச்சொல்லுகிறோம்!"

"நெய்வேலியில் எப்போது நல்ல நிலை ஏற்படும் என்றால்" டில்லி அதைப் பற்றி ஆலோசித்து வருகிறது!" இப்படியே இந்த நாட்டு அமைச்சர்கள் பதில் சொல்லிக் கொண்டு வந்தால் "இவர்களுக்கு வேறு என்ன தான் வேலை" என்று நமது அண்ணா மிகத் தெளிவாக எடுத்துப் பேசி இருக்கிறார்!

சென்னையில் இயங்கி வரும் சர்க்கார், டில்லியின் அதிகாரத்திற்குட்பட்ட ஒரு பஞ்சாயத்து போர்டு, ஒரு நகர சபை என்பதை நாம் அடிக்கடி எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம்!

ஒரு நகர சபைக்கு உள்ள அதிகாரம்—தெருக்களை சுத்தப்படுத்தி சுகாதாரத்தைப் பாதுகாப்பதும், மக்களுக்கு குடிதண்ணீர் அளிப்பதும், அதற்காக சில வரிகளை விதிப்பதும் தான்!

நமது அமைச்சர்கள் கோலேந்தி ஆட்சி புரியும் நகரசபைக்கோ (சர்க்கார்) இதைவிட கொஞ்ச அதிகாரமும், அடிமைத்தனமும் கொஞ்சம் அதிகமாக இருக்கலாம்!

சென்னை நகர சபையோ, அல்லது வெளியூர்களில் உள்ள நகரசபைகளோ ஒரு காரியத்தை செய்ய வேண்டுமானால் தீர்மானம் நிறைவேற்றி சென்னை சர்க்காரின் ஒப்புதலைப் பெற வேண்டும்! அதைப் போலவே சென்னை சர்க்காரும் ஒன்றை செய்ய வேண்டுமானால் டில்லியின் அனுமதியைப்பெற வேண்டும்! சென்னையிலிருக்கும் சர்க்காருக்கு வேண்டுமானால் அதிகாரம் கொஞ்சம் விரிந்தும், பரந்தும் இருக்கலாம்!

நகர சபை வீட்டு வரி விதிக்கிறது!

சென்னை சர்க்கார் நிலவரி வசூலிக்கிறது!

நகர சபை கடைகளுக்கும், தொழில் ஸ்தாபனங்கள் சிலவற்றிற்கும் லைசன்ஸ் வழங்குகிறது!

சென்னை சர்க்கார் விற்பனை வரி விதிக்கிறது!

வருமானமல்லாத நகரசபைகள் மான்னியம் கோருகின்றன! கடன் கேட்கின்றன!

சர்க்காரும் கடன் எழுப்புகிறது! மான்னியம் கேட்கிறது!

இந்த இரண்டுக்கும் என்ன தான் வித்தியாசம்! இங்கே இருக்கும் நகரசபைகளுக்கும், சர்க்காருக்கும் என்ன தான் வேற்றுமை!

பெரும் தொகை அளிக்கும் வருமான வரியை டில்லிக்கு வசூலித்து கொடுக்கிறது! பெரும் வருவாயுள்ள, தந்தி, தபால் அத்தனையும் மத்திய சர்க்கார் வசம்! கோடிக் கணக்கில் குவித்திடும் ரயில்வே அவர்கள் வசம்! நாமோ பிச்சை எடுக்கிறோம், காலடித் தூக்கி பல்லிளித்து நிற்கிறோம்! ஏன் இந்த பரிதாப நிலை?

நமது அறிஞர் அண்ணா அவர்கள் சட்ட சபையிலும் வெளியிலும், இதை எடுத்துச் சொன்னால் நமது மந்திரிமார்கள்—மந்திரிமார்கள் என்று சொல்லுவது தவறு—டில்லியின் கலெக்டர்கள் வெகுண்டெழுகிறார்கள், வேங்கையெனப் பாய்கிறார்கள்! கிண்டலும், கேலியும் புரிகிறார்கள்!

நிதி அமைச்சர் சுப்பிரமணியம், தன்னுடைய பதவி கருங்கல்லாலும், சிமிட்டியாலும் கட்டப்பட்டிருப்பது போல் கிண்டல் செய்கிறார்! அரசியல் சரித்திரத்தை சரிவர படிக்காமல் நையாண்டி செய்கிறார்!

நீங்களெல்லாம் மூட்டைப் பூச்சிகள், நசுக்கி விடுவேன்" என்று சொன்ன முன்னாள் முதலமைச்சர் ஆச்சாரியார் தனிக்கட்சி ஆரம்பித்து விட்டார்! "காங்கிரஸ் கட்சியை ஆழக் குழி தோண்டி புதைப்பேன்" என்று கர்ஜனையும் புரிகிறார்!

மொழிக்காக போரிட்ட வீராங்கனைகளை, கருவுற்ற தாய்மார்களை காட்டுக்கனுப்பிய முன்னாள் முதல்வர் ஓ. பி. ராமசாமி இன்று உங்கள் திட்டங்களை எதிர்க்கிறார்!

நிதிஅமைச்சர் மட்டும் மாறாமல் இருப்பார் என்பதற்கு என்ன சான்றுகள் இருக்கின்றன!

புளிய மிலாரால் அடிபட்டு, பல ஆண்டு காலம் சிறையிலே வாடி பல பெரும் பதவிகளை வகித்த ஆச்சாரியாரே இன்று மாறி விட்டார்! இவர் மட்டும் மாறாமல் அப்படியே இருப்பார் என்பதற்கு என்ன அத்தாட்சி! "நான் கட்சி மாறியதில்லை, பிரிந்து வந்ததுமில்லை" என்று கிண்டல் பேசிடும் நிதி அமைச்சரை கேட்கிறோம்—ஏன் மாற மாட்டார்கள்!

நமது நிதி அமைச்சர் சுறுசுறுப்பானவர், இளைஞர்—எடுத்ததற்கெல்லாம் வெடுக்கென்று பதில் சொல்லக் கூடியவர்! எல்லாவற்றிற்கும் மேலாக எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடியவர்! அவரையும், காங்கிரசின் போக்கையும் கவனிக்கும் போது விரைவில், மிக விரைவில், அவர் மாறுவார், மாற்று கட்சியும் அமைப்பார்! அந்த நேரத்தில் அவருடைய ஆற்றலை நிச்சயமாக நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்! அதற்காக நம்மையும், நாட்டையும் இப்போதிருந்தே தயார் செய்து வைக்க வேண்டும்!

"வடக்கு, தெற்கு" என்று நாம் பேச ஆரம்பித்து எத்தனையோ காலமாகி விட்டது! வடவர்கள் இழைத்து வரும் கொடுமையை இருபது, இருபத்தி ஐந்தாண்டு காலமாகவே சொல்லி வருகிறோம்! இனியும் கூட்டமளவோடு பேச்சளவோடு இருக்கக் கூடாது!

(11-ம் பக்கம் பார்க்க)

வல்லூறு தலைமையில் மாடப்புறு பேசுமா புலியின் முன்னே புள்ளிமான் வருமா?

கொள்ளை லாபக்காரர்கள் கொண்டாடும் சுதந்திர தினத்தில் கழகம் எப்படி கலந்து கொள்ளும்?

சுதந்திர தின விழா, கட்சியின் விழாவாக்கக் கூடாது!

சென்னையில் அறிஞர் அண்ணா முழக்கம்!

சென்னை 27-வது வட்டத்தில் உள்ள எம்.ஜி.ஆர். மன்றத்தின் ஆண்டு விழா கடந்த 13-12-59 அன்று மாலை நகராட்சி மன்ற உறுப்பினர் தோழர் எம். ஆர். கண்ணன் தலைமையில் நடைபெற்றது,

விழாத் துவக்கத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் ஆனைகௌனி காவல் நிலையத்தின் அருகாமையிலிருந்து ஊர்வலமாக மேடைக்கு அழைத்து வரப்பட்டார். ஊர்வலத்தில் பொய்க்கால் குதிரையாட்டமும், வான வேடிக்கையும், சிலம்பாட்டமும் நடைபெற்றது!

விழாவில் நகராட்சி மன்ற உறுப்பினர் தோழர் சி. ஆர். பாலசுந்தரம், அவர்களும். தோழர் பஞ்சாட்சரம், நாகை. புரட்சிதாசன் ஆகியோர் கலந்து கொண்டு எம் ஜி. ஆர். மன்றத்தின் சிறப்பு பணியினை குறித்து பாராட்டிப் பேசினார்!

இறுதியில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசினார்! அவர் பேசியதாவது—

அன்புள்ள தலைவரவர்களே! அருமை நண்பர்களே!

இந்த வட்டாரத்தில் உள்ள ஆர்வமுள்ள தோழர்கள்—முருகேசனை போன்ற நண்பர்களும் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் பேராலே இம்மன்றத்தினை துவக்கி, பணியாற்றி வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இதற்கு காரணமான நண்பர்களுக்கும், ஆதரவளிக்கும் பொது மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்!



இன்றைய தினம் தமிழ் நாட்டில் உள்ளவர்கள் மட்டுமல்ல, கலை உலகில் ஈடுபட்ட அனைவருமே நண்பர் எம். ஜி, ராமச்சந்திரனை 'நல்ல நடிகர் மட்டுமல்ல, கொள்கையிலேயும் உறுதி கொண்டவர்' என்று பாராட்டுகிறார்கள்! இக்கருத்து எந்தக் கொள்கை உடையவர்களாக இருந்தாலும் வரவேற்கக் கூடியது!

நண்பர் ராமச்சந்திரன் சில ஆண்டு கட்கு முன்பு காங்கிரஸ் கொள்கையிலே பற்றுடையவராக இருந்தார்! இந்தியா விடுதலை அடைந்த பிறகு நாட்டிலே உள்ள பலகட்சிகளின் போக்கை கூர்ந்து கவனித்து, பல கட்சிகளின் கொள்கையை கேட்டும், எழுதியதை படித்தும், மனதிற்கு சரியெனபட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தார்!

அவராகவே சேர்ந்தாரே தவிர, யாரும் ஆசை காட்டி அழைக்கவில்லை!

நல்ல நடிகர் என்று பெயரெடுத்து, சிறப்பான பெயரெடுத்த பிறகே நம் கழகத்தில், சேர்ந்தார், கலை உலகத்தில் மட்டுமில்லாமல் பொது மக்களுக்கும் பணியாற்றியுள்ளார்!

நம் கழகத் தோழர்களில் நொடித்து போனவர்களுக்கு உதவியளித்தும், கொள்கையிலே ஈடுபாடு கொண்ட காலத்திலிருந்தே எடுக்கின்ற படத்தின் மூலமும், நேரடி தொடர்பு கொண்டு கலந்துறவாடும் நண்பர்களிடையேயும் கழகக்கொள்கையை பரப்பி நல்ல செல்வாக்கு பெற்றிருக்கிறார்!

போன சட்டசபை தேர்தலில் தமிழகத்தில் உள்ளபட்டி தொட்டிகள் பூராவும் பிரச்சாரம் செய்து ஆதரவு திரட்டினார்கள்.

சில நாட்களுக்கு முன்னர் அவருக்கு ஏற்பட்ட விபத்துக்கு எல்லோருமே வருத்தப்பட்டார்கள்! மாற்றார் அவரைப் பற்றி என்ன எண்ணிக் கொண்டிருந்தாலும் எம், ஜி. ஆரைப் போன்றவர்கள் யாருமில்லை! வெள்ளை உள்ளம் கொண்டவர்—தூய்மையான உள்ளம் கொண்ட அப்படிப்பட்டவருக்கா இந்த விபத்து' என்று வருத்தப்பட்டார்கள்!

முன்பை விட புதிய வலிவு பெற்று—உடற்கட்டு பெற்று இன்று திகழ்கிறார்!

உடற்கட்டும், உள்ளத் தூய்மையும் கட்டுப்பாட்டுணர்ச்சியும் கொண்ட எம்,ஜி ஆர், பெயராலே மன்றத்தை வைத்திருப்பவர்கள் பொறுப்பான வகையிலே மன்றத்தை நடத்திச் செல்ல வேண்டும்! நண்பர் பாலசுந்தரம் சொன்னது போல் மாற்றார் என்ன சொன்னாலும் லட்சியப் படுத்தாமல் செயலாற்ற வேண்டும்!

எனக்கு வரவேற்பு தருகின்ற போது நண்பர்கள் சிலர் சிலம்பம் ஆடினார்கள்! இதை பார்க்கின்ற போது மாற்றார், 'இவர்கள் கத்தி குத்துவதிலே சமர்த்தர்கள், சிலம்பம் ஆடுகிறவர்கள். சில்லறைத் தனமுடையவர்கள்' என்று சொல்லுவார்கள்! அவர்களுக்கு இப்படிப்படட்டவர்கள் கிடைத்தால் பூவைத்து கொண்டாடுவார்கள்! கிடைக்காத போது தான் இப்படி தூற்றுகிறார்கள்!

நான் முன்பு பெத்துநாயக் ன் பேட்டையில் கௌன்சிலா தேர்தலுக்கு நின்றேன்! அப்போது இங்கே இருக்கும் நண்பர் பாலசுந்தரம் காங்கிரசில் இருந்தார்! அப்போது கத்தி சுத்தத் தெரியாத என்னை, சிலம்பம் ஆடத் தெரியாத என்னையே போக்கிரி என்று அவர்கள் கூறினார்கள்!

கத்தி வைத்து விளையாடுகிறவன், வீடு கட்டத் தெரிந்தவன் என்றால் இப்படிப்பட்ட பணிகளில் இறங்கக் கூடாதா என்று கூறினார்! போக்கிரிக்கும் வீரனுக்கும் வித்தியாசமுண்டு! கட்டுக் கடங்கியவன் தான் வீரன்! கட்டுக்கு அடங்காதவன் தான் போக்கிரி! பட்டாளத்திற்கு உரியவர்கள், நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் வேண்டியவர்கள் கட்டுப்பாட்டுக்கு அடங்கிய வீரர்கள் தான்!

சிலம்பம் விளையாடுவது நல்லதே தவிர கெட்டதல்ல! இந்தியா எல்லையிலே சீனா இருக்கிறது! சீனா இந்தியாவை ஆக்ரமித்து விடுமோ என்று அஞ்சுகிறார்கள்! சட்ட சபையிலே கவர்னர் உரையின் பேரில் நான் பேசிய போது 'இந்தியாவை சீனர்கள்பிடிக்கவிட'மாட்டோம் கட்சியை மறந்து காப்பாற்றுவதற்கு துணையாக இருப்போம்' என்று சொன்னேன்! எதை நம்பிச்சொன்னேன்? உங்களையெல்லாம் நம்பித் தான் சொன்னேன் ஏன்?

பட்டாளத்தில், கட்டு திட்டங்களுச்கு அடங்கியவர்களாய், உடல் பலம் மட்டுமல்ல, உள்ள உரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்! அப்படிப் பட்டவர்கள் பட்டாளத்தில் நம்மவர்கள் இருந்தால் சீனாகாரன் விரட்டுவதற்கு மட்டுமல்ல; நம் நாட்டை எதிர் காலத்தில் மீட்பதற்கும் உதவும்!

வீரர்கள், வீர உள்ளத்தோடு, நல்ல உடற்கட்டு பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும் என்று சொன்னேன்! ஏன்

(4-ம் பக்கம் பார்க்க)

சுதந்திர கட்சி இரண்டாண்டு வளர்ந்தால் காங்கிரஸ் பத்தாண்டு செல்வாக்கை இழக்கும்! பலவீனம் அவர்களுக்கே தவிர - நமக்கல்ல!

(அண்ணா பேச்சு)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னேன்? உடற்கட்டு இல்லாத கஷ்டம் எனக்கு தெரிகிறது! ஊர்வலத்தில் என்னை நடந்து வரும்படி பல நண்பர்கள் வற்புறுத்தினார்கள்! என்னை வரவேற்று அழைத்து வருவதில் ஆர்வம் மிகுந்தவர்கள் இந்தப் பக்கத்தில் பத்து பேர், அந்தப் பக்கத்தில் பத்து பேர் நெருக்கிக்கொண்டு வந்தால், அண்ணாத்துரையை முழுக்க பார்த்திருக்க முடியாது. இது அண்ணாதுரை கை, இது அண்ணாத்துரை கால் இப்படித் தான் நீங்கள் பார்த்திருக்க முடியும்!

உடல் வலிவு மட்டுமின்றி கட்டுப்பாடு உணர்ச்சியும், ஆர்வமும், அடக்க உணர்ச்சியும் இருக்க வேண்டும்! அப்போது தான் நாடு விடுதலை அடைய முடியும்! அப்படிப்பட்ட வீரர்கள் எம். ஜி. ஆர். மன்றத்தில் இருப்பதை நான் பாராட்டுகிறேன்!

நம் கழகம் இன்று புதிய நிலையை பெற்றிருக்கிறது! முன்பு, நாம் கொட்டகைகளிலும், வெட்ட வெளியிலும் கூடி நாம் யார், நமக்கு ஏற்பட்டிருக்கும் அல்லலிலே இருந்து எப்படி விடுபடுவது என்று பேசிக்கொண்டிருந்தோம். நாம் அரசியலில் ஈடுபடாத காலத்தில், இதைப் பற்றியே எண்ணாத காலத்தில் காங்கிரசிலே உள்ள பெரியவர்கள் ஊர் ஊராகச் சென்று கூட்டம் போட்டு வம்பு பேசி, நம்மை வம்பிக்கிழுத்துப் பேசினார்கள்.

திராவிட நாடு வேண்டுமென்று கூட்டத்தில்கூச்சல்போட்டுபேசி வருவதில் பயனில்லை தேர்தலில் நின்று, மக்களிடம் ஓட்டு பெற்று சட்டசபையில் வந்து பேசட்டுமே பார்க்கலாம் என்று அவர்கள் தான் பேசினார்கள். நிச்சயமாக நான் சொல்லுகிறேன், எனக்கு அந்த ஆசையே கிடையாது.

கல்யாணமாகாத வாலிபன் வீதி வழியே போகிறபோது, அவனுடைய நண்பர்கள் 'எப்போது கல்யாணம்' என்று கேட்டால் முதலில் 'இப்போதென்ன அவசரம் பார்த்துக் கொள்ளலாம்' என்பான். தினமும்திருப்பி திருப்பிக் கேட்டால் அவனுக்கே ஒரு ஆசைதோன்றும்,கல்யாணம் செய்துகொண்டால்தான் என்ன என்று! மறுபடியும் நண்பர்கள் எப்போது கல்யாணம் என்று கேட்டால் அடுத்த தைமாதம், ஏழாம் தேதி நடைபெறும் என்று சொல்லுவான்.

அதைப்போல் காங்கிரஸ்காரர்கள் 'தேர்தலில் போட்டியிட முடியுமா' என்று நம்மைப் பார்த்து திருப்பித் திருப்பிக்கேட்டார்கள். நின்றோம், மக்கள் நமக்கு ஆதரவாக பதினேழு லட்சம் வாக்குகளை அளித்தார்கள். காங்கிரசுக்கு ஐம்பது லட்சம் வாக்குகள் கிடைத்தன. நம்மைவிட மூன்று மடங்கு அவர்கள் பெற்றார்கள். நாம் மூன்றில் ஒரு மடங்கு பெற்றிருக்கிறோம்.

உதாரணத்திற்கு சொல்வேன் மக்கள் அவர்களிடத்திலே ஒரு ரூபாயை கொடுத்திருக்கிறார்கள் நம்மிடத்திலே முப்பது காசுகளை கொடுத்திருக்கிறார்கள்.

ஐம்பது ரூபாய் கொடுத்து வாங்குகின்ற பசு ஒன்னறை படி பால் தருகிறது. முன்னூறு ரூபாய் கொடுத்து வாங்கிய பசு மூன்று படி கொடுக்கிறது. அதிக விலை கொடுத்து வாங்கிய பசு மூன்றுபடி பால்தான் கொடுத்திருக்கிறது. விலை அதிகம்தான்! ஐம்பது ரூபாய் கொடுத்து வாங்கிய பசு ஒன்னறை படி கொடுக்கிறது. ஐந்து மடங்கு அதிக விலை கொடுதது வாங்கிய பசுவைக்காட்டிலும், குறைந்த விலையில், அதிக பால் தருகின்ற பசுவை பாராட்டுவதுபோல் நாம் மக்களால் பாராட்டப்படுகிறோம். நமக்கு வயது பத்து அவர்களுக்கு வயது அறுபதை தாண்டி விட்டது! அவர்கள் பெற்றசெல்வாக்கை விட அதிகமாக பெற்றிருப்பது நாம்தான்!

நமக்கு பணம் வேண்டுமென்றால் இங்கே நண்பர்கள் உண்டி ஏந்தி வருவதுபோல், உண்டியேந்தி கேட்கக்கூடிய நிலை! அவர்கள் கட்சி பணம் படைத்த கட்சி! எங்கெங்கு, எப்படியெப்படி லாபம் கிடைக்கிறதோ அங்கெல்லாம் தட்டாமல் தயங்காமல் 'செக்' கொடுக்கின்ற சீமான்கள் அவர்கள் பக்கம் இருக்கிறார்கள், நம்மிடத்திலே இருக்கின்றவர்கள் ஏழை, எளியவர்கள்!

அந்தக்காலத்தில் நம்மை, கடவுள் இல்லையென்று சொல்கின்றவர்கள், கோயில்களை இடித்து தள்ளுங்கள் என்று கூறுகிறவர்கள், நாத்திகர்கள் என்றெல்லாம் ஏசிப்பேசினார்கள்!

காங்கிரஸ்காரர்கள், கடவுளே இல்லையென்று கூறுகின்ற அவர்கள் பசுமையான மரத்தை பார்த்தால், பசுமையான மரம் கூட பட்டுப்போகும், எங்கள் பார்வை பட்டால் பட்டமரம் கூட துளிர்த்து விடும் என்று சொல்லுவார்கள்.

அவர்கள்கண்பட்டால் துள்ளி விளையாடும் பிள்ளை கூட இறந்து விடும். எங்கள் கண்பட்டால் மலடி கூட இரட்டைப்பிள்ளை பெறுவாள் என்று பிரச்சாரம் செய்தார்கள் இப்படிபட்டபொய் பிரச்சாரத்தையும் மீறி நமக்கு பதினேழு லட்சம் வாக்குகள் கிடைத்திருக்கின்றன. பத்திரிகை பலம் மிகுந்தவர்கள், பண பலம் படைத்த அவர்கள் பெற்ற வாக்கு ஐம்பது லடசம்! நமக்கு பண பலமில்லை. நமக்கு உள்ளங்கை அளவுபோல் 'நம் நாடு' பத்திரிகையும், நம்மை சேர்ந்துள்ள நண்பர்களின் பத்திரிகை பலத்தை கொண்டே பதினேழு லட்சம் வாக்குகள் பெற்று நமக்கு கிடைத்த இடம் பதினைந்து. இதைவிட மூன்றுமடங்கு வாக்குகளை பெற்ற காங்கிரசுக்கு 150 இடங்கள் கிடைத்திருக்கிறது.

ஐம்பது லட்சம் வாக்குகள் பெற்றகாங்கிரசுக்கு 150 இடம். பதினேழு லட்சம் வாக்குகள் பெற்ற நமக்கு 15 இடம். இது வேடிக்கையானதுதான். இது எப்படி என்று கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டும். இதற்கு காரணமென்ன, இன்று இருக்கிற தேர்தல் முறை அப்படி!

மேல் நாடுகளில், ஒரு கட்சி பெறுகின்ற வாக்குகளின் அடிப்படையிலே இடம் பிரிக்கப்படுகிறது. அப்படி கணக்குப் போட்டால் அவர்களுக்கு ஐம்பது இடங்களுக்குமேல் கிடைத்திருக்காது!

150 பேர் அங்கே தர்பார் நடத்துகிறார்கள். பதினைந்து பேராக உள்ள நாங்கள், அவர்களுக்கு தாசர்களாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள்.

சட்ட மன்றத்தில் கவர்னர் உரையாற்றிய போது நாங்கள் போகவில்லை! கவர்னர் முன்பு வந்தபோதும் நீங்கள் வரவில்லை. இப்போது வந்த போதும் கலந்து கொள்ளவில்லை. ஏன் வரவில்லை? என்று சட்ட சபையிலே கேட்டார்கள்.

அப்போது, "என் கட்சியின் கொள்கை வட நாட்டிலே இருந்து அனுப்புகின்ற கவர்னர் தென்னாட்டிற்கு தேவையில்லாதவர். திராவிட முன்னேற்றக் கழகம் வடநாட்டிலே இருந்து விடுபடும் லட்சியத்தை வைத்துக் கொண்டிருக்கிறது" என்று சொன்னேன். கவர்னர் உரையின் போது கலந்து கொள்ளாததற்காக ஒழுங்கு பிரச்னை எடுக்கப் போகிறார்களாம். ஒரு வேளை கவர்னர் உரையாற்றுகிற போது கலந்து கொள்ளாமல் இருக்கக் கூடாது. என்று சொல்லக்கூடும். கலந்து கொள்ள மறுத்தால் இடம் தரமாட்டோம் என்றும் சொல்லலாம். அப்படிச் சொன்னால் விட்டது தொல்லை என்று இருப்போம். உலகம் பூராவும் நமது கொள்கை தெரிய வேண்டுமென்று நினைத்தேன்.

அவர்கள் என்னைப் பிடிக்க நினைத்தார்கள், அவர்கள் தான் இப்போது என் வலையில் விழுந்திருக்கிறார்கள். இந்த செய்தி உலகம் பூராவுக்கும் தெரிந்தால்—

'சென்னை என்று ஒன்று இருக்கிறதாம்—அங்கே மேதி, மேதி என்னும் வட நாட்டு கவர்னர் இருக்கிறாராம்—அவர் சட்ட சபையிலே பேசுகின்ற போது எல்லா கட்சியினரும் இருந்தார்களாம்! ஆனால் ஒரு கட்சி மட்டும் போகவில்லையாம். ஏன் என்றால் வடநாட்டு ஆட்சி அவர்களுக்குபிடிக்காதாம்என்று இப்படி அமெரிக்காவிலே, பிரிட்டனிலே, ஜப்பானிலே, ரஷ்யாவிலே, பிரான்சிலே, பல நாடுகளில் 'சொல்லிக் கொள்வார்கள். அங்கெல்லாம் நமது கட்சியைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு இவர்களே வழி அமைத்துக் கொடுக்கிறார்கள். கிராமத்திலே ஒரு பழமொழி உண்டு! கொள்ளிக் கட்டையை எடுத்து தலையை சொரிந்து கொண்டார்கள்' என்று. அதைப் போல் அவர்கள் தலைக்கு அவர்களே கொள்ளியை வைத்துக் கொள்கிறார்கள்!

நாம் கூறிவருகிற கோரிக்கை சொல்லி வருகின்ற திட்டம் நம் நாடு தனி நாடாக வேண்டுமென்பது, இந்தியா ஒன்று என்று பேசுகின்றவர்களிடமிருந்து பிரிய வேண்டுமென்பதுதான்!

நாம் இருக்கின்ற இதே நிலைமையில் தான் 1935-ம் ஆண்டில் கார்ப்பரேஷனில் சத்தியமூர்த்தி இருந்தார். கார்ப்பரேஷன் கட்டிடத்தில் வெள்ளைக்காரன் கொடி பறந்தது. தேசிய கொள்கை பேசி வந்த சத்தியமூர்த்தி, வெள்ளைக்காரன் கொடி பறக்கும் காரிலே வந்து கார்ப்பரேஷன் கட்டிடத்திற்குள் நுழைந்து — உள்ளே, 'வெள்ளைக்காரனை இந்த நாட்டை விட்டு ஓட்ட வேண்டும்' என்பார். அவரிடத்திலே வேலை செய்யும் அதிகாரிகள்—'வெள்ளைக்காரனை ஓட்ட வேண்டுமென்று கூறி விட்டு, உள்ளே வருகிறீர்களே' என்றார்கள். அதே விதமாகத் தான் நம் கழகம் இன்று கார்ப்பரேஷனில் ஆளுங்கட்சியாக இருந்து வருகிறது.

சட்ட சபையிலே, கழகத் தோழர்கள் சுதந்திர தின விழாவில் கலந்து கொள்ளாதது பற்றியும், மேயர் கொடி ஏற்றுவிக்காததை பற்றியும் அமைச்சர் பக்தவச்சலம் கேட்டார்கள்.

'சுதந்திர தின விழாவை மக்கள் விழாவாக ஆக்கவில்லை! காங்கிரஸ் விழாவாக மாற்றுகிறீர்கள். எல்லா நாடுகளிலும் சுதந்திர தின விழாவை கொண்டாடுகிறார்கள். பிரான்ஸ் நாட்டில் சுதந்திர விழா கொண்டாடுகிற போது, விழாவில் எல்லா கட்சியினரும் கலந்து கொள்கின்றனர்! அங்கே ஆடல் பாடல் நடைபெறும், கேளிக்கை, விளையாட்டு, ஊர முழுவதும் திரு

(7-ம் பக்கம் பார்க்க)

எங்கள் குடும்பம், சிந்தப்பா குடும்பம்!

தியாகிகளை நம் கழகம் என்றுமே மறந்ததில்லை!

திருவல்லிக்கேணியில் கலைஞர் கருணாநிதி முழக்கம்!



12—12—59-ந்தேதி சென்னை 42-வது வட்டம் தி. மு. க. சார்பில் திரு. நீலநாராயணன் தலைமையில் நடைபெற்ற மேயர் பாராட்டுக் கூட்டத்திலும், மாண்ட மாவீரன் சிந்தப்பா என்கிற முகைதீன் பிச்சை குடும்பத்திற்கு நிதியளிப்புக் கூட்டத்திலும், கலைஞர் கருணாநிதி பேசியதாவது:—

அன்புள்ள தலைவர் அவர்களே! மதிப்பிற்குரிய மேயர் அவர்களே! தாய்மார்களே! நண்பர்களே!

இன்று திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் இந்தக் கூட்டத்தைக் கூட்டப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள். நமது அருமை நண்பரும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் நீங்காத பற்று கொண்டவரும். சென்னைக்கு பண்டித நேரு பவனி வந்தபோது, போலீஸ் அடக்கு முறைக்கு ஆளாகி மாண்ட மாவீரன் சிந்தப்பா என்கின்ற முகைதீன் பிச்சையின் குடும்பத்திற்கு நிதியளிப்பதற்கும், சென்னை மாமன்றத்திற்கு மேயராகவும் துணை மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் நமதருமை நண்பர்களான அப்துல் காதர், தேவராசன் ஆகியோரைப் பாராட்டுவதற்கும் இக்கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. இக்கூட்டத்தில் பேச வாய்ப்புக் கிடைத்ததற்கு மகிழ்கிறேன்.

நமது மேயர், துணை மேயர் நமது நகரமக்களுக்குப் பல நன்மைகள் செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள்! அவர்கள் இருவரும் தியாக உள்ளம்படைத்தவர்கள்! விடுதலை இயக்கமாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் படைவரிசையில் தங்களைப் பதிவு செய்து கொண்டவர்கள். அவர்கள் நமது நாட்டு மக்களுக்காகவும், நாட்டு விடுதலைக்காகவும் தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்கள்! அவர்கள் தங்களது கடமைகளை நன்கு செய்வார்கள் இருவரையும் பாராட்டுகிறேன்.

சென்னை மாவட்ட தி. மு. கழகம் சிந்தப்பாவின் குடும்பத்திற்கு நிதியளிக்கிறது.

மாண்ட மாவீரன் சிந்தப்பா, குடும்பம் இன்று அல்லல் பட்டு அவதியுறுகிறது! சென்னை மாவட்ட தி. மு. க அளிக்கும் இந்த ரூ500நூறு வெண் பொற்காசுகளை அவரது மகன் காசீமிடம் உங்கள் சார்பாக அளிக்கிறேன்!

சிந்தப்பா விடுதலைக் கட்டத்தின் ஆரம்பத்தில் தன்னுடைய உயிரை அர்ப்பணித்தார். விடுதலை வீரர்களின் எழுச்சியையும், வீர உணர்ச்சியையும் சிந்தப்பா கண்டார். அந்த வீரர்கள் பட்டாளத்தில் சிந்தப்பா சேர்ந்தார். பண்டிதர் நேரு, சென்னையில் பவனி வந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து கருப்புக்கொடி காட்டிய நேரத்தில் வீரர் சிந்தப்பா தன்னையும் ஆளாக்கிகொண்டார்! அதன் காரணமாக போலீஸ் அடக்கு முறைக்கு ஆளாகி குதிரைப் படைகளின் குளம்புகளால்மிதிக்கப்பட்டு,போலீசாரின் குண்டாம் தடிகளுக்கு ஆளாகி பிணமானார். நாம் இன்று அளிக்கும் இந்த ஐநூறு (500) வெண் பொற்காசுகள் அவரது குடும்பத்திற்கு போதுமானதல்ல, அவரது உயிருக்கு நாம் அளிக்கும் சன்மானமுமாகாது! நாம்நம்முடைய கடமையைச்செய்திருக்கிறோம்!

தமிழ் நாட்டில் நமது விடுதலைப் பாசறையில் சேர்ந்து பலர் உயிர் தியாகம் செய்திருக்கிறார்கள்! பழங்கால நமது சரித்திரத்தைப் பார்த்தால் அது நன்கு விளக்கும். அது போலவேதான் நமது சிந்தப்பாவும் தமதுஉயிரை பணமாக்கி இருக்கிறார்!

வீரர் சிந்தப்பாவின் அன்னை அவருக்குப் பெயரிடும் போதே ஆணையிட்டிருக்கிறார் நாட்டின் மானம்காக்க, அடிமைத் தளையை வெட்ட உன் ரத்தத்தை இந்த நாட்டிற்குச் சிந்தப்பா என்று, அந்த ஆணையை மாவீரன் நிறைவேற்றி விட்டான்.

திராவிட முன்னேற்றக் கழகம், தியாகிகளின் பிணங்களைக் காட்டி அதை கட்சி பிரசார பீரங்கிகளாக்கிக் கொள்ளவில்லை, கடந்த 10 ஆண்டுகளாக நமது கழகம் வீரர்களை, தியாகிகளை இழந்திருக்கிறது. அப்படி தியாகம் செய்த வீரர்களின் குடும்பங்களை தி. மு. க அலைய வைக்கவில்லை. தவிக்க விடவில்லை, அலட்சியம் செய்யவில்லை. தம்மால் முடிந்ததையெல்லாம் அந்தக் குடும்பங்களுக்கு உதவியிருக்கிறது.

சிந்தப்பா வேறு—நாம் வேறு என்று நாம் நினைக்கவில்லை நமக்குள் குடும்பப்பாசம், ரத்த பாசம் இருந்தே வந்திருக்கிறது. சிந்தப்பாவின் குடும்பம் அல்லல்பட்டால் தி, மு. க வில் உள்ள அத்தனை பேர் உள்ளமும் அல்லல் படும். அவர் குடும்பம் நமது குடும்பம் என்று எண்ணுபவர்கள்நாம். இன்றுநாம்கொடுக்கும் நிதி, காலணா அரையணா என்று மடிப்பிச்சை எடுத்துச் சேர்த்த 500 வெண்பொற் காசுகளை நிதியாக அளிக்கிறோம்.

வீரர் சிந்தப்பாவின் உயிர் மறைந்து விட்டது. ஆனால் எதிர்கால திராவிட வரலாற்றில் அவரது புகழ் மறையாது, மங்காது. அண்ணன் அழகிரி புகழ் எங்கும் பரவி இருப்பதுபோல் இவரது புகழும் பரவி நமக்கு வழி காட்டியாக இருக்கும்.

திராவிடர் கழகமாக இருந்த காலத்திலும், திராவிடமுன்னேற்றக் கழகமாக மாறிய காலத்திலும் உயிர்களை நீத்துதமதுவாழ் நாட்களை முடித்துக் கொண்ட குடும்பங்களை நமது கழகம் மறந்ததில்லை! அஞ்சா நெஞ்சன் அழகிரி, நடராஜன், தாளமுத்து, மஜீத், தூத்துக்குடி சாமி ஆகியோரின் விடுதலை வேட்கையை —தியாகத்தை எண்ணி, எண்ணி அவர்களைப் பின்பற்றி பணி புரிந்து வருகிறோம்! அந்த மாவீரர்களின் குடும்பங்களை தவிக்க விடவில்லை, அல்லல் படவிடவில்லை, திராவிடமுன்னேற்றக்கழகம்அவர்கள் குடும்பங்களை ஆதரித்துத்தான் வந்திருக்கிறது.

நமது குடும்பத்தின் பெரிய அண்ணா, இளைய அண்ணா, ஆயிரமாயிரம் தம்பிமார்கள்எல்லாம் இருக்கும்போது அவர்கள் குடும்பங்களை அல்லல் படும்படி விட்டுவிட மாட்டார்கள்.

நம்முடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் சிறைசென்று மாண்ட ருக்குமாங்கதன் என்ற இளைஞனின் குடும்பத்திற்கு வரும் 18—12—59-ஆம் தேதியன்று நிதியளிக்கப் பேசுகிறார்.

'ஓடிவந்த இந்திப் பெண்ணை விரட்ட இந்தி எதிர்ப்புப் படையில் சேர்ந்து போரிட தன் தாயாரிடம் விடைபெற்று வீரன் தாளமுத்து களம் சென்றான்.

"போய் வா மகனே உன் மொழிக்கு வந்த ஆபத்தை நீக்கு" என்று விடை கொடுத்து அவனது வீரத்தாய் விடை கொடுத்தனுப்பினாள். தன் அருமை மகன் தண்டனை காலம் முடிந்துவிடுதலையாகி வருவான், கட்டி அணைத்து அவனை வரவேற்று வரலாம் என்று அவனது வீரத்தாய் சிறை வாயிலில் காத்திருந்தாள். அந்த அம்மையார் கண்ட காட்சி யென்ன? பேசாத தாளமுத்துவை, விழிக்காத தாளமுத்துவை என்றுமே பேச முடியாமல் நீண்ட துயில் கொண்ட நிலையிலுள்ள தாளமுத்துவை பிணமாகக் கண்டாள்

(8 ம் பக்கம் பார்க்க)

அத்தியாயம் 26

இராணுவ தளபதி, அருமை நாயகத்தை கைது செய்து காவலில் வைத்துவிட்டார் என்ற செய்தி ஊரெங்கும் ஒரு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது! வேல் விழியோ மூர்ச்சையாகி கீழே விழுந்தாள்! என்னதான் இருந்தாலும் தந்தையல்லவா? அந்த பாசம் கட்சிக்கும், கொள்கைக்கும் அப்பாற்பட்டது அல்லவா? இருவரும் இருதுருவமாக வாழ்ந்து வந்தாலும் இரத்தபாசம் அவளை கலங்க வைத்துவிட்டது!

பாண்டியனுக்கே கண் கலங்கி விட்டது என்றால் வேல்விழியின் உள்ளம் உடையாமலா இருக்கும்!

மூர்ச்சையிழந்து கிடந்த வேல் விழியைத் தூக்கி தன் மடியில் படுக்க வைத்துக் கொண்ட பாண்டியன், முகத்தில் தண்ணீரைத் தெளித்தான்! வேல்விழியும் கண்ணைத் திறந்து பார்த்தாள்! 'அப்பா' 'அப்பா'! என்று அவளுடைய வாய் முணு முணுத்தது!

"அப்பாவுக்கு ஒன்றும் ஆபத் தில்லை வேல்விழி! பயப் படாதே" என்று பாண்டியன் ஆறுதல் கூறினான்!

"அப்பாவுக்கு மரண தண்டனை கிடைக்கும் என்று சொல்லுகிறார்களே!" வேல்விழி கவலையோடு கேட்டாள்!

"மரண தண்டனையா? பைத்தியக்காரி! அவர் என்ன அப்படி குற்றம் செய்து விட்டார்!" பாண்டியன் வேல்விழியின் உள்ளத்தைத் தேற்றினான்!

"குற்றம் செய்தால் தானே தண்டனை கிடைக்கும்? பாவம் ஒரு இடத்தில், பழி ஒரு இடத்தில்"! வேல் விழி தனக்குத் தானே முணு முணுத்துக் கொண்டாள்!

"வேல்விழி! உன் அப்பாவின் உயிருக்கு நான் உத்தரவாதம் அளிக்கிறேன்!" பாண்டியன் பேச்சில் பெருமிதம் கலந்திருந்தது!

"அதெப்படியத்தான் முடியும்? நீங்களென்ன எமதர்ம ராஜனோ?"

"உங்கள் அப்பாவைப் பொறுத்த வரையில் நான்தான் எமதர்ம ராஜன்! நான் நினைத்தால் அருமை நாயகத்தின் உயிரைப் போக்கவும் முடியும், மீட்கவும் முடியும்! ஆனால் எமதர்மன் நினைத்தால் எதையுமே செய்ய முடியாது! பாண்டியன் சிரித்துக்கொண்டே புராண கதை பேச ஆரம்பித்தான்!

"அத்தான் கிண்டலும் கேலியும் பேச இதுதானா நேரம்!" வேல்விழி வேதனையோடு கூறினாள்!

"ஏன், இந்த நேரத்திற்கு என்ன?"

"நான் தந்தையை இழந்து தவிக்கிறேன்! நீங்களோ அதைக் கண்டு உள்ளம் பூரிக்கிறீர்கள்!" வேல்விழி நெஞ்சம் அடைக்கப் பேசினாள்!

"நீ தந்தையை இழந்து தவிக்கிறாய்! நானோ என் தாய்நாட்டைப் பறி கொடுத்து விட்டுப் பதறுகிறேன்! உனக்குள்ள கவலை எனக்கிருக்காதா? பாண்டியன் கொஞ்சம் ஆத்திரத்தோடுதான் பேசினான்!

"அத்தான்! உங்களுக்கு உள்ளம் என்பதே கிடையாதா?

"இந்த கேள்வியை உன் தந்தையிடம் கேட்டிருக்க வேண்டும்! கையிலே துப்பாக்கி இருக்கிறது என்ற காரணத்தால் மனிதர்களை மிருகங்களாக்கி சுட்டு வீழ்த்தியபோது, அவரைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கவேண்டும்! அதிகாரம் இருக்கிறது என்ற காரணத்தால் என்னை சிறைச்சாலையிலே தள்ளி சித்திரவதை செய்த போது கேட்க வேண்டிய கேள்வியை என்னிடம் கேட்கிறாய்!" பாண்டியன் உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளை அள்ளிக் கொட்டினான்!

"அதற்காகப் பழிக்குப் பழி வாங்குகிறீர்களா?"

"அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்!"

இருவரும் வார்த்தைகளால் மோதிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு பெரியவர் ஓடிவந்தார்"

"பாண்டியா! என்ன இது? தந்தைப்பாசம் யாருக்குத்தான் இருக்காது! வேல்விழி உன் மனைவி! உன் சுக துக்கங்களை உன்னோடு சேர்ந்து அனுபவிப்பவள்! அவள் மனதைப் புண்படுத்தாதே!" பெரியவர் பாண்டியனுக்கு புத்திமதியைக் கூறினார்!

"அருமை நாயகத்திற்கு ஆபத் தில்லை என்று சொல்லிய பிறகும் என் மீது சந்தேகப்பட்டால் என்ன செய்வது தாத்தா!"

"ஏன் ஆபத்தில்லை! புலி புள்ளிமானுக்கு வாழ்வளிக்குமா? மாடப் புறுவை வல்லூறு வாழ்த்துமா? ராணுவத்தாரிடம் அகப்பட்ட அருமைநாயகம்தான் தப்புவாரா? பெரியவர் உள்ளதை எடுத்துச் சொன்னார்!

"தாத்தா! உங்களுக்குக் கூடவா இது புரியவில்லை?

"புரிந்து கொண்டு தான்சொல்லுகிறேன்!

"எதைத் தாத்தா புரிந்து கொண்டீர்கள்?"

"அருமை நாயகத்தின் மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றத்திற்கு என்ன தண்டனை கிடைக்கும் என்பதை!"

"தாத்தா! நிச்சயமாக அவருக்கு எந்த தண்டனையும் கிடைக்காது!

"என்னப்பா! நீயே இராணுவ அதிகாரி போல் பேசுகிறாய்!"

"ஆமாம் தாத்தா! நான்தான் இராணுவ அதிகாரி!"

"பாண்டியா! உனக்கென்ன பைத்தியமா?"

"ஏன் தாத்தா?"

"அதிகாரம் உன் கையில் இருப்பது போல் பேசுவது, உன் மூளையிலே ஏதோ கோளாறு இருக்கிறது என்பதைத்தானே காட்டுகிறது!

"தாத்தா! அதிகாரம் என் கையில் இருந்தாலென்ன? என் தோழன் கையில் இருந்தாலென்ன?"

"தோழனா?" பெரியவர் திகைத்தார்!

"ஆமாம்! என் அருமைத் தோழன் வேலழகன் தான் கர்னல் தாமஸ்" என்று கூறியபடி ஒரு புகைப்படத்தை பெரியவரிடம் பாண்டியன் காட்டினான்!

"யார்? இவனா கர்னல் தாமஸ்?" பெரியவர் ஆச்சரியத்தோடு கேட்டார்!

"இவரை இதற்கு முன்பு தெரியுமா தாத்தா?" பாண்டியனும் வியப்போடு கேட்டான்!

"பாண்டியா! இவன்தான் என்மகன் முத்தையன்! பல வருடங்களுக்கு முன்பு "கட்சி, கொள்கை" என்று பேசியே என்னை விட்டுப் பிரிந்தவன்!" பெரியவரின் உள்ளம் பூரிப்படைந்திருப்பதை கண்ணில் வந்த ஆனந்தக்கண்ணீர் எடுத்துக்காட்டிற்று!

"அத்தான்! நம்ம வேலழகனா இவர்! வேல்விழி இதயம் மலர்ந்து மகிழ்ச்சியை வாரி வாரி இறைத்துக் கொண்டிருந்தது!

(தொடரும்)

அவசர ஆலிங்கனம் செய்து கொண்டு அகமகிழ்வது நாங்கள் அல்ல- நீங்கள் தான்!

(அண்ணா பேச்சு)
(4-ம் பக்கத்தொடர்ச்சி)

விழா கோலத்தில் இருக்கும். அங்கே சுதந்திர தின விழாவை மக்கள் விழாவாக ஆக்கியிருக்கிறார்கள். இங்கு சுதந்திர தின விழா என்றால் காங்கிரஸ் மேடை அமைத்து மற்ற கட்சிகளை திட்டுவார்கள்.

சுதந்திர தின விழா மக்கள் போற்றிப் புகழ்கின்ற விழாவாக இல்லாத காரணத்தாலே தான் மேயர் சுதந்திர தின விழாவில் கலந்து கொள்ளவில்லை'' என்றேன்.

நாம் திராவிடர் கழகமாக இருந்த சமயம் சுதந்திர தினத்தை கொண்டாடக் கூடாது, அது நமக்கு துக்க நாள் என்று பெரியார் கூறிய போது நான் 'திராவிட நாடு' பத்திரிகையில் 'சுதந்திர தினத்தை கொண்டாடுவதில் தவறொன்றுமில்லை. இப்பொழுது ஒழிந்திருக்கும் அடிமைத்தனத்திற்காகவாவது ஆனந்திக்காமல் இருக்க முடியாது. சுதந்திர தின விழா கொண்டாட வேண்டுமென்று எழுதினேன்! இதனால் பல நண்பர்கள் என் மீது ஆத்திரப் பட்டார்கள். அப்போது பெரியார், 'அண்ணாதுரை காங்கிரசில் சேர்ந்து விடுவான்' என்று கூறினார். அவரது ஜோஸ்யம் எல்லோருக்கும் பலிக்கும் என்றாலும் அந்த ஜோஸ்யம் என் வரையில் பொய்த்து விட்டது.

சுதந்திர தின விழாவை காங்கிரஸ், கடசி விழாவாக கொண்டாடாமல் எல்லா கட்சியினரும் கொண்டாட வேண்டும். அதற்காக எல்லா கட்சியைச் சேர்ந்தவர்களையும் கொண்ட பொறுக்கு கமிட்டி நியமிக்கப்பட வேண்டும்.

சுதந்திரத்தின் அருமை பெருமைகளை மட்டுமல்ல, யார் யாரை அடிமை படுத்தியிருக்கிறார்கள் என்றும், வட நாடு தென்னாட்டை அடிமை படுத்தியிருக்கிறது என்பதையும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

சுதந்திர தின விழாவை பொதுவாக, கூட்டு முயற்சியாக ஆக்குவார்களானால் திராவிட முன்னேற்றக் கழகத்தை பொறுத்த வரையில் கலந்து கொள்வதில் தடை இல்லை.

சுதந்திரத்திற்காக காங்கிரஸ் போராடி இருந்தாலும் இன்று கொள்ளை லாபக்காரர்களும், கள்ளமார்க்கெட்காரர்களும் வேகமாக 'பாரத் மாதாவுக்கு ஜே' என்று கூறி சுதந்திர தின விழாவை கொண்டாடுகிறார்கள்.

திருப்பூர் குமரனைச் சொல்லி கொண்டாடினால் அந்த திக்கு நோக்கி கும்பிடலாம்.

வ. உ. சிதம்பரம் பிள்ளையின் பெயரைச் சொல்லி கொண்டாடினால் அவர் பெயரை ஆயிரம் தடவை ஜெபிக்கலாம்.

இன்று ராஜா சர் முத்தையா செட்டியார் போன்றவர்களும், கப்பல் வியாபாரி ஹாஜா ஷெரீப் போன்றவர்களும் மகாத்மா பேரால் மக்களை பிழிந்தெடுத்து சுதந்திரத்தைக் கொண்டாடுகிறார்கள். இது எப்படி மக்கள் விழாவாகும்?

பூனையின் தலைமையிலே கிளி பேசுமா? வல்லூறுவின் தலைமையிலே மாடப்புறு பேசுமா? நரியின் முன்னே கோழி முட்டை

(9-ம் பக்கம் பார்க்க)

மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ.

பொங்கல் மலர்

★

மூவண்ண முகப்போடு

கொள்கை முழக்கோடு

கருத்துச்செறிந்த

காவியக் கதையோடு

கண்ணைக் கவ்வும்

ஓவியப் பொலிவோடு

உங்கள் இதயம் குளிர——மக்கள் உள்ளம் மகிழ

எதிரிகள் எண்ணம் மடிய—எங்கள் இலட்சியம் வெல்ல

வெளிவருகிறது!

விலை 30 காசு

விற்பனையாளர்கள் முன்பணத்துடன் தேவையான இதழுக்கு உடனே எழுதவும்.

"மாலைமணி"

சென்னை-14.

வெள்ளாட்டை கொன்று ருசி பார்த்த வேங்கை தன் ரத்த நாக்கால் உபதேசம் புரிகிறது !

ஆணவம் பேசியவர்கள் வாழ்ந்ததே இல்லை !

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கருணாநிதி பேச்சு

அந்த வீரத்தாயின் மனம் என்ன வேதனை அடைந்திருக்கும்.

தாளமுத்து இறந்ததைப்பற்றி சென்னை சட்ட மன்றத்தில் அன்று முதலமைச்சராயிருந்த ஆச்சாரியாரை "ஏன் செத்தான்" என்று கேள்வி கேட்ட போது "படிக்கவில்லை செத்தான்" என்று ஆணவமாக-இறுமாப்பாக பதிலளித்தார். அவர் பதில் வெள்ளாட்டைக்கொன்று ரத்தத்தை ருசி பார்த்தவேங்கை எக்காளமிடுவது போலிருந்தது.

ஆச்சாரியார் பேசிய பேச்சை வைத்து நாட்டு மக்களிடப் பிரச்சாரம் செய்திருக்கலாம் அப்படிச் செய்யவில்லைநாம். அதுதான் நமது பண்பு!

தாளமுத்து, நாம் திராவிடர் கழகமாக இருந்தபோது இந்தி எதிர்ப்புப் போரில் சேர்ந்து மாண்டார்.

கணவனை—இழந்து குடும்பத்தில் அல்லல் பட்டுக் கொண்டிருந்த தாளமுத்துவின் மனைவியார் திராவிடர் கழகத் தலைவர் பெரியாரிடம் சென்று தமது குடும்பம் படும் அல்லலைக்கூறி ஒரு எருமை மாடு வாங்கிக் கொடுத்தால் அதைக் காப்பாற்றிக் கொள்ளுகிறேன் என்று கேட்டார்! அவர் அதைக் கவனிக்கவில்லை. ஆனால் நாம் பிரிந்த பின் மாயவரத்தில் திரு ஜீவரத்தினம் தலைமையில் நடைபெற்ற தி. மு. க மாநாட்டில் வந்து அந்த அம்மையார் தமது அல்லலைத் தெரிவித்தபோது நாம் உண்டியல் மூலம் வசூலித்து மடிப்பிச்சை எடுத்து சுமார் 800 ரூபாய் கொடுத்தோம். திராவிடர் கழகம் மறந்ததை திராவிட முன்னேற்றக் கழகம் செய்தது. திராவிடர் கழகத்தில் நாம் இருந்தபோது நமதுகைகள் கட்டப்பட்டிருந்தது. அன்று நாம் ஒன்றும் செய்ய முடியாத நிலையிலிருந்தோம் மாயவரத்தில் நடைபெற்ற நமதுமாநாட்டில் 17 ரூபாய்தான் மிச்சமானது ஆனால் மக்களிடமிருந்து வசூலித்து எண்ணூறு வெண்பொற்காசுகள் நாங்கள் கொடுத்தோம். அது மட்டுமல்ல, உடையார் பாளையத்தில் வேலாயுதம் என்ற ஆரம்ப ஆசிரியர் இருந்தார். அவர்பகுத்தறிவு—சுயமரியாதை இயக்கத்தில்சேர்ந்துபணியாற்றி வந்தார்! அவரது பிரசாரத்தில் கோபங்கொண்ட காங்கிரசார் அவர் குளிக்கச் சென்றபோது சோப்பு டப்பி கரையில் இருக்க அவரை அடித்துக் கொன்று அவர்களே மரத்தில் கழுத்தில் கயிறு கட்டித் தொங்கவைத்து விட்டார்கள். அவர்கள் குடும்பம் தவித்தது. அல்லல் பட்டது. நாம் திராவிடர் கழகமாக இருந்தபோது இந்தக் கொடுமை நடந்தது, திராவிடர் கழகம் அவர் குடும்பத்தை மறந்தது நாம் மறக்கவில்லை. நமது அண்ணா மறக்கவில்லை, பிரிந்து வந்த ஆரம்பத்தில் அவரதுமகள் திருமணம் வந்தது. அந்த திருமணச் செலவை நாம் ஏற்றுக் கொண்டோம். நமது அண்ணா அவர்களும், நானும் சேர்ந்து 2000 ரூபாய் சேர்தது நாங்களே அந்தத் திருமணத்தை நடத்தினோம்.

சட்ட மன்றத்திற்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்ற கழக அபேட்சகருக்கு எதிராக நின்ற காங்கிரஸ் அபேட்சகரை எதிர்த்து தோற்கடித்த நெல்லிக் குப்பம் வீரர் மஜீத் குடும்பத்தையும் நாம் மறக்கவில்லை,

தாம் வேலைசெய்த ஆலையிலிருந்து அவர் சம்பளம் வாங்கிக் கொண்டு வேலையை முடித்து வீடு திரும்பும்போது பாரத மாதா புத்திரர்கள் — அஹிம்சா மூர்த்திகள் — "நில்லுடா போகாதே" என்று தடுத்து கட்டாரியால் வயிற்றில் குத்தி, 'மகாத்மா காந்திக்கு ஜே, பாரத மாதாவுக்கு ஜே!" என்று முழக்கமிட்டு பிணமாக்கி ஓடினார்கள்! அந்தக் குடும்பம் தவித்தது, ஆனால் நானும், அறிஞர் அண்ணாவும் பவுடர் பூசி நாடகம் நடித்து 3000 ரூபாய் வசூலித்து ஒரு கரும்புத் தோட்டம் வாங்கி அவர்கள் குடும்பத்திற்குக் கொடுத்தோம்!

அதுபோன்றே கல்லக்குடியில் நடைபெற்ற போராட்டத்தில் உயிர் நீத்த மாவீரன் லால்குடி நடராஜனை மறக்கவில்லை—அந்த வீரன் கழுத்துச் சதை பிய்க்க சுட்டு வீழ்த்தினார்கள் — இந்தக் கொடுமைக்கார அரசியலார்கள்!

இந்த நடராஜன் கல்லக்குடி போராட்டத்தில் தம்மையும் என்னுடைய தலைமையில் வந்த படையில் அழைத்துப் போகும்படி கேட்டார். நான் அடுத்த படையில் திரு. சுப்பையா தலைமையிலாவது, திரு. கண்ணதாசன் தலைமையிலாவது வரும்படி கூறி அனுப்பினேன். அவன் மனமுடைந்து சென்றான்! போலீசார் கொடுமையாக சுட்டதால் குண்டடிபட்டு மாண்டான்! அன்று அவன் விருப்பப்படி என்னுடன் வந்திருந்தால் இறந்திருக்கமாட்டான். "இன்று போ, நாளை வா" என்று கூறி அனுப்பியதால் இந்த கதி ஏற்பட்டது! நான்தான் அந்த பரிதாப நிலைக்குக் காரணம் என்று நினைத்து மனம் நொந்தேன்! அந்த மாவீரன் குடும்பத்திற்கும் நமது அண்ணா அவர்கள் 1000 ரூபாய் சேர்த்துக் கொடுத்தார்கள்!

அதேபோன்று நம்முடைய விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்ட இன்னொரு மாவீரனை மறக்க முடியாது! செபஸ்தியான் என்ற இளைஞன் துப்பாக்கிக் குண்டுக்காளாகி மனித இன்பத்தை அடைய முடியாத நிலையில்—வருங்கால சந்ததிகள் ஏற்பட முடியாத நிலையில், மனிதனாக வாழ்வதற்கும் லாயக்கற்ற நிலையில், ஒரு மனிதன் வாழ்க்கையில் எந்த இன்பத்தை அடைய ஆசைப்படுவானோ அதற்கு வழியற்ற முறையில் இந்த மானங்கெட்ட அரசாங்கம்—இந்த ஆணவம் பிடித்த அரசாங்கம், கொடுங்கோன்மை மிக்க அரசாங்கம், அடக்கு முறையால் ஆள நினைக்கும் அரசாங்கம் வெறி கொண்டு துப்பாக்கியால் சுட்டு அந்த மாவீரனின் ஆண் குறியை நீக்கிவிட்டது. ஆண்மை இழந்து மரக்கட்டையாக நாட்டில் வாழ்ந்துவரும் அந்த மாவீரனையும், அவனது குடும்பத்தையும் நாம் மறக்கவில்லை!

அந்த மாவீரன் குடும்பத்திற்கும் நாம் 1000 ரூபாய் கொடுத்து உதவியிருக்கிறோம்!

நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் நேப்பியர் பார்க்கில் கூறியதுபோல் நம்முடைய கழகத்தில் ஒருவன் கண்ணீர் சிந்தினால் அது நாம் சிந்துவது போன்றதாகும்! ஒருவன் செந்நீர் சிந்தினால் அது நாம் சிந்தியது போலாகும்! அவர்கள் குடும்பம் அல்லல்பட்டால் நம் குடும்பம் அல்லல்படுவது போலாகும்! நாம் நமது கழகத்தில் உள்ளவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ரத்த பாசமுள்ளவர்கள்! நமது தாயகம் விடுதலை அடைய பல தியாகங்களைச் செய்திருக்கிறோம்! பல மாவீரர்களை எல்லாம் இழக்கிறோம்! இப்படி நாம் கஷ்ட நஷ்டங்களுக்காளாகி, பல இன்னல்களுக்காளாகியபின்தான் வளர்ந்திருக்கிறோம்! இந்த நாடு நம் நாடு! நாம் அடிமைப்பட்டிருக்கிறோம்! நமது சொந்த தாயகம் விடுதலை அடைய வேண்டுமென்று நாம் பணி செய்து வருகிறோம்! நம்மை கிண்டல் செய்தும், தூற்றியும் இழித்தும் பழித்தும் குறும்புத்தனமாகவும் பேசி வருகிறார்கள். நம்மை எதிர்த்துப் பேசுபவர்கள் நம்முடைய கொள்கைகளை எதிர்ப்பதில்லை! நம்மையும் நம்முடைய தலைவர்களையும் தனிப்பட்ட முறையில் ஏசி வருகிறார்கள். நம்மாலும் அந்தப் பாதையில் போக முடியும்! ஆனால் நமக்கு அனுமதியில்லை! நம்முடைய அருமைத் தலைவர் அண்ணா, நமக்கு கண்ணியம் கற்றுக் கொடுத்திருக்கிறார். அதை நாம் மீற முடியாது. நமக்கு பெரும் பொறுப்பு இருக்கிறது!

எனக்கு முன்பு பேசிய நண்பர், காமராசரையும், காங்கிரசையும், மற்ற கட்சிகளையும் தாக்கிப் பேசினார்! அவரை நண்பர், என்ற முறையில் கேட்டுக்கொள்கிறேன், அது கூடாது. அவர் பேசியதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். இங்கு இந்த நண்பர் பேசியதை நமது நாவலரும், நமது அண்ணாவும் கேள்வியுற்றால் என்னைக் கடிந்து கொள்வார்கள்,

நீ மேடையிலிருந்தும் கூடவா காரசாரமாகப் பேச அனுமதித்தாய்? கௌரவக் குறைவாகப் பேசவிட்டாய் என்று கேட்பார்கள். யாரையும் காரசாரமாகவோ, கண்ணியக் குறைவாகவோ பேசக்கூடாது, அடக்கமாகப் பேச வேண்டும், அது தான் பண்பு.

இந்த நாட்டில் கடமை, கண்ணியம் என்ற அறிவு மந்திரத்தை நமது அண்ணா போதித்திருக்கிறார்!

சட்டமன்றத்தில் நமது மாநில கவர்னர் உரை ஆற்றினார். அந்த உரையில் மக்களுக்கு நன்மை பயக்கும் காரியங்கள் காணவில்லை. ஆனால் நமது அண்ணா கூறி வருகின்ற கடமை, கண்ணியத்துடன் நடக்க வேண்டும், தனிப்பட்டவர்கள் கௌரவத்திற்கு பங்கம் வரும்படி நடக்கக் கூடாதென்ற மந்திரத்தைப் பின்பற்றி பேசியுள்ளார். ஆனால் அதற்கு மாறாக கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய தேனியைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் — காந்தியின் சீடர், அகிம்சா வீரர் பரம்பரையினர் சட்ட மன்ற உறுப்பினர் கவர்னர் உரையில் அறிவித்த கண்ணியத்தை மறந்து சட்டமன்றம் என்பதையும் மறந்து பேசியுள்ளார்.

(10-ம் பக்கம் பார்க்க).

கலை உலகம் மட்டுமல்ல தமிழகமே போற்றும் கலைஞர்

உடல் வலிவு மட்டுமல்ல உள்ள உரமும் பெற்றவர் எம். ஜி. ஆர்.

(அண்ணா பேச்சு)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யிடுமா? புலிக்கு எதிரே புள்ளிமான் வருமா?

தேரை முகர்ந்த தேங்காய் என்று சொல்லுவார்கள். அதைப் போல் சுரண்டுகின்ற முதலாளிகள் கொண்டாடுகிறார்கள்.

அப்படி யார், யார் இருக்கிறார்கள் என்றால், இந்தப் பகுதியிலேயே நகராட்சி மன்ற காங்கிரஸ் உறுப்பினராக இருக்கும் நாராயண பிள்ளையைப் போன்றவர்கள்!

கடந்த சட்டசபை தேர்தலின் போது காங்கிரஸ் கட்சி சார்பில் அனந்த நாயகி அம்மையாரும், நம் கழகத்தின் சார்பில் என். வி. நடராசனும் நின்ற போது நான் பேசிய தேர்தல் கூட்டத்திற்கு அவர் தான் தலைமை வகித்தார். சட்டையை மாற்றிக் கொள்வது சுலபம்! அப்படி சட்டை மாற்றிக் கொள்பவர்கள் தான் காங்கிரஸ் கட்சியில் இருக்கிறார்கள். நான் எப்படி மாற்றிக் கொள்ள முடியும்?

அவர்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்—சுதந்திர தின விழாவை கொண்டாடவில்லை யென்றால் எப்படி கொண்டாட முடியும்?

அதே போல் சுதந்திர தின விழாவில் மேயரும் கலந்து கொள்ளவில்லை என்று சொன்னார்கள்.

அப்படியே மேயரும் துணை மேயரும், சுதந்திர தின விழாவில் கலந்து கொண்டிருந்தால் இதே காங்கிரஸ்காரர்கள் 'ஆகா பார்த்தாயா, எங்கள் கொடிக்கு கீழ் தான் இருக்கிறார்கள்' என்று சொல்லியிருப்பார்கள்.

ஆகாத பெண்டாட்டிக்கு கை பட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம் என்பார்கள்.

வெளியே போக வேண்டும், திண்ணையிலே படுத்துக் கொள்வான். அவன் மனைவி தலையணை கொண்டு வந்து கொடுத்தால் அதை தூக்கி குப்பையிலே போடு என்பான். பனி கொட்டுகிறதே போர்வையை போர்த்தி கொள்ளுங்கள் என்று போர்வையைக் கொடுத்தால் மூட்டைப் பூச்சி இருக்கிறது என்பான். இப்படி கூறுவதற்கு காரணம், வெளியே போகவேண்டும் என்பதற்காக!

அதைப் போல் நம்முடைய மேயர், தேசீய கொடி ஏற்றினால் 'ஆகா'! மேயர் கொடியேற்றினார்கள் என்று பாராட்ட மாட்டார்கள். குற்றம் கூறவேண்டும் என்பதற்காகவே காமராசர் முதல் நேற்று காலையில் சேர்ந்த காங்கிரஸ்காரன் வரை ஊர் ஊராகச் சென்று பேசி வருகிறார்கள். அவர்கள் எது கேட்கிறார்களோ அதுவரை பதில் சொல்லுங்கள்.

இப்படிப்பட்ட பிரச்னை எழுகின்றபோது 'இவர்கள் ஏமாந்து விடுவார்கள் என்று காங்கிரஸ்காரர்கள் நினைக்கிறார்கள். அதெற்கெல்லாம் நாங்கள் ஏமாறமாட்டோம்.

இப்போது நகராட்சி மன்றத்தில் வெற்றி பெற்றிருக்கிறோம் அடுத்த தேர்தலில் சட்ட சபை நமதாக இருக்க வேண்டும். இங்கே அப்துல் காதர் மேயராக இருக்கிறார். அடுத்த சட்டசபையில் அன்பழகன் மந்திரியாக வரமாட்டாரா என்ற ஆசை இருக்கிறது. அதை தவறு சொல்லவில்லை, அதுவே நோக்கமாக இருக்கக் கூடாது என்றுதான் கூறுகிறேன்.

காங்கிரஸ்காரர்களுக்குள்ளே அச்சம் ஏற்பட்டுவிட்டக் காரணத்தாலேதான் இப்பொழுதிருந்தே திட்டித் தீர்க்க வேண்டுமென்று நினைத்து ஏசிப் பேசி வருகிறார்கள்.

மேயர் தேர்தலில் பிறந்த வெற்றிக் குழந்தை எட்டு மாதத்தில் பிறந்த குழந்தையே தவிர பத்து மாதத்தில் பிறந்ததல்ல!

இடுப்பு வலி ஏற்படுவதற்கு முன்னே, அவர்கள் கர்ப்பம் என்று தெரிந்து கொள்வதற்கு முன்னே இடுப்பிலே குத்திக் கொண்டிருந்தார்கள். கொஞ்சம் பொருத்திருந்தால் நிறை பிரசவமாக இருந்திருக்கும்.

பொதுவாகவே எனக்கு வெந்த பண்டம்தான் பிடிக்கும் கனிநத பழம்தான் இனிக்கும்.

நூற்றுக்கு மேற்பட்ட 'தோழர்கள் நாம் நடத்தப் போகும் போராட்டத்தில் ஈடுபடவேண்டும், போராட்டத்தில் ஈடுபட்டு உடலிலே பல தழும்புகள் பெற வேண்டும்.

உடலிலே ஏற்பட்ட தழும்பை தடவிப் பார்க்கிற போது ஆறுயிரம் ஓட்டுகளை பெறுவதற்கு வழி அமைத்தது என்று நினைக்க வேண்டும்.

இந்தப் புண், சைதாப்பேட்டையில் போலீஸாரின் தடியடி போது ஏற்பட்டது என்று சொல்ல வேண்டும்.

இந்தப் புண், திருவொற்றியூரில் துப்பாக்கி பிரயோகத்தின் போது ஏற்பட்டது. அப்படிப் பட்ட தழும்புகள் நமது வெற்றிக்கு அடிப்படை! அது தான் வெந்த பண்டம், கனிந்த பழம் என்று கூற முடியும்! அதற்கேற்றார் போல் நம்மை ஆளாக்கிக் கொள்ள வேண்டும்.

'ராஜாஜி ஆரம்பித்திருக்கும் சுதந்திரா கட்சியின் வளர்ச்சியால் காங்கிரஸ் பலம் குன்றி விடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் பலம் தான் குறையும்!'' என்று ராஜாராம் நாயுடு ஒரு கூட்டத்தில் பேசினார்.

நானும் ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தேன். ராஜாஜி ஆரம்பித்திருக்கும் சுதந்திரா கட்சியால் நமக்கல்ல சங்கடம்; காங்கிரசுக்குத் தான்!

மோடி பரம்பரை உனக்கா, எனக்கா? முத்தையா செட்டி யார் யார் பக்கம்? பிர்லா பெட்டி, உனக்கா, எனக்கா? டாடா பெட்டி உனக்கா, எனக்கா? என்று அவர்களுக்குள்ளே சண்டை போட்டுக் கொள்கிறார்கள். அந்தச் சண்டை நமக்குத் தேவை இல்லை!

நமக்குள்ளே இருக்கிற சண்டைச் சேரிக்கு பக்கத்திலே நடக்கும் சண்டை! அவர்களுக்குள்ளே ஏற்பட்டிருக்கும் சண்டை பங்களாச் சண்டை!

அடுத்த தேர்தலில் பணக்காரர்கள் காங்கிரஸ் கட்சிக்குப் பணம் கொடுப்பவர்கள் சுதந்திரா கட்சிக்கும் தரப்போகிறார்கள். ஒருவன் ஐம்பது லட்சம் கொடுப்பதாக இருந்தால் முப்பது லட்சம் காங்கிரஸ் கட்சிக்கும், இருபது லட்சம் சுதந்திராக் கட்சிக்கும் தருவார்கள் இப்படி ஐம்பது லட்சம் இரண்டாக பிரிக்கப்படும்.

அவர்களுக்கும் காமராஜருக்கும் ஏற்பட்டிருக்கும் சண்டைக்கு இடையே நாம் புகுந்தால் ஓடி வந்துவிடலாம்!

நமக்கு பணம் கொடுக்க எந்தப் பணக்காரர்கள் இருக்கிறார்கள், நமக்கு பணம் கொடுக்கிறவர்கள் எல்லாம் இதோ பக்கத்தில் இருக்கும் நண்பர்கள்.

இந்தப் பக்கத்திலே இருக்கும் இவர்களை சுதந்திரா கட்சியிலே சேர்த்துக் கொள்வார்களா? சுதந்திரா கட்சியிலே சேர வேண்டுமானால் சிறிது நேரம் பேசினால் ஓய்வு எடுத்துக்கொள்பவராக இருக்க வேண்டும். முப்பதாயிரம் ரூபாயிலே கார் இருக்க வேண்டும், இரண்டு மூன்று லட்சம் மதிப்புள்ள பங்களாவுக்கு சொந்தக்காரராக இருக்க வேண்டும். வாயிலே ஒரு பல் இருக்கக் கூடாது! இவைகளுக்கு சொந்தக்காரர்களாக இருக்க வேண்டும். இந்தக் கட்சி வளருவதால் காங்கிரசுக்கு நஷ்டமே தவிர நமக்கு ஒரு துளியும் நஷ்டமில்லை—நம்மைத் துளியும் பாதிக்காது!

காங்கிரசின் ஊழல்களை புட்டுப் புட்டுச் சொல்கின்றவர் ராஜாஜி! அங்கே இருக்கின்ற ஊழல்கள் அவருக்குத்தான் அதிகமாகத் தெரியும்—நமக்குத் தெரியாது. காங்கிரசிலே உள்ள நாணயம் அவர்களுக்குத்தான் தெரியும்!

இப்போது சுதந்திரா கட்சியிலே இருக்கும் வி. பி. மேனன் டில்லியில் பெரிய அதிகாரியாக இருந்தபோது ஒன்பது காங்கிரஸ் மந்திரிகள் மீது லஞ்சக்குற்றச் சாட்டை சுமத்தினர். குற்றச் சாட்டை ஆதாரமாக்கி அவர்கள் மீது வழக்கு போட்டிருந்தால் ஒவ்வொரு மந்திரிக்கும் ஐந்து வருஷம், தீட்டியிருப்பார்கள். வழக்கு போடாமல் விட்டு விட்டார்கள்.

உதாரணத்திற்கு சொல்வேன் அதோ இருக்கிற டீ கடையில் நண்பர் பஞ்சாட்சரம் டீயும், பொறையும் சாப்பிட்டுவிட்டு பணம் கொடுக்காமல் போய் விட்டார் என்று கண்ணன் குற்றஞ் சாட்டினால், அதைக் கேள்விப்பட்ட பஞ்சாட்சரம், கண்ணன் கன்னியாகுமரிக்கு போயிருந்தாலும் அங்கே போய் கண்டுபிடித்து கழுத்துணியை இழுத்துப்பிடித்து பணம் கொடுக்காமல் மோசம் செய்துவிட்டேன் என்று எப்படி கூறலாம் என்று கேட்டு, அதே டீ கடைக்கு முன் மன்னிப்பு கேட்க வைப்பார். ஒரு கப் டீக்கே இத்தனை ஆர்ப்பாட்டம் என்றால் வி. பி. மேனன் சொன்ன குற்றச் சாட்டுக்கு மறுப்பு சொல்லாமல் உப்புக் கண்டத்தை பறி கொடுத்த பார்ப்பனத்தியைப் போல் ஊமையாகி இருக்கிறார்கள்.

உனக்கு வக்கு இருந்தால். வழக்கு தொடர்வதுதானே!

பி. வி. மேனன் சொன்ன குற்றச்சாட்டுகளை மறுத்து, நீ சொன்ன மந்திரிகளை கோர்ட்டிலே நிறுத்துவோம் என்றால் யார், யார் குற்றவாளிகள் என்று கேட்டால், அவர் எங்கெந்த மந்திரிகளை காட்டுவாரோ என்று அச்சப்பட்டு, பயந்து வழக்கு போடாமல் விட்டுவிட்டார்கள். மறுத்துப் பேசுவதற்கு அவர்களுக்கு வக்கு இல்லை—திராணி இல்லை.

குடும்ப விஷயம் வெளியிலே சொல்லக் கூடாது என்று அஞ்சுகிறார்கள். இரண்டு வருடத்தில் சுதந்திரா கட்சி வளர்ச்சி பெற்றால் காங்கிரசுக்கு பத்து வருடத்தில் பெற்ற செல்வாக்கு குறையும். காங்கிரசின் ஊழல் அம்பலமாகும்! ஆகவே அந்தக் கட்சி வளர்வது பற்றி எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை!

சட்ட சபையில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் 'உங்களுக்கும் சுதந்திராக் கட்சிக்கும் ஒப்பந்தம் இருக்கிறதா' என்று என்னைக் கேட்டார்.

'ஆமாம்! இருக்கிறது' என்றேன்.

'என்ன ஒப்பந்தம்' என்றார் நிதி அமைச்சர்.

ஒருவருக்கொருவர் மோதிக் கொள்வதில்லை' என்ற ஒப்பந்தம் இருக்கிறது' என்றேன்.

ஆச்சாரியார் நல்ல காரியம் செய்கிறார். குடும்பத்து ஊழல்களை யெல்லாம் வெளிப்படுத்துகிறார் அந்த பலனை அனுபவிக்கப் போகிறவர்கள் நாம் தான்!

(12-ம் பக்கம் பார்க்க)

உரிமையற்றவர்களாய், ஊமைகளாய் வடவருக்கு அடிமைகளாய் அமைச்சர்கள் இருப்பதேன்?

(கருணாநிதி பேச்சு)

8-ம் பக்கத் தொடர்ச்சி

திராவிட முன்னேற்றக் கழகமும், மற்றும் சர்வகட்சிகளும் சேர்ந்து விலைவாசிகளைக்குறைக்க வேண்டுமென்று கேட்பதைக் கண்டித்து அந்த உறுப்பினர் பேசும்போது விலைவாசிகளைக் குறைக்கக் கூடாது. அப்படி விலைவாசிகள் குறைக்க வேண்டுமென்று கேட்பவர்கள் என் தொகுதிக்கு வந்தால் விரலை வெட்டுவேன், என் தொகுதிக்குள் நுழையவிடமாட்டேன் என்றார். கவர்னர் உரைமீது பேசவந்தவர் கவர்னர்சொன்ன கண்ணியத்தை கௌரவத்தை மறந்து பேசினார்.

நான் பேசும்போது அதைக் குறிப்பிட்டு அகிம்சாமூர்த்திகளின் நடத்தையைக் குறிப்பிட்டேன்! ஏகலைவனின் விரலை துரோணாச்சாரியார் வெட்டியது போன்றுவெட்டட்டும். சட்டமன்றத்தில் இப்படி பேசலாமா என்றும் இதுதான் கண்ணியமா? என்றும் கேட்டேன்! ஆனால் கனம் சுப்பிரமணியம் என் பேச்சைக் கேட்டும் மௌனமாக இருந்தார்! அண்ணா பேச்சைக் கண்டித்துப் பேசிய மந்திரி பத்தவத்சலமாவதுதேனி வீரரின் பேச்சுக்கு மன்னிப்புக் கேட்பார் என்று நினைத்தேன், கேட்கவில்லை. அவர் மந்திரியாயிற்றே கேட்பாரா? நான் சாமான்யன் எனது தோழர் தவறாக இங்கு பேசியதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்! இதிலிருந்து தெரிந்துகொள்ளுங்கள் அவர்கள் நிலையை!

இம்மாதிரி அக்கிரமமாக-ஆணவமாகப் பேசியவர்கள் நாட்டில் வாழ்ந்ததில்லை. காட்டுமிராண்டிகள்கூட பேச அஞ்சும்படியாக சட்டமன்றத்தில் விரலை வெட்டுவேன், என் தொகுதிக்கு வந்தால் என்று பேசினால் அமைச்சர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்! எனக்கு பிரான்சு சரித்திரம் ஞாபகத்திற்கு வருகிறது. பிரான்சில் ஒரு ராணி இருந்தாள்! அவள் உலகத்தைப் பற்றி அறியாதவள், அவளிடம் "பசிக்கிறது" ரொட்டி கிடைக்கவில்லை என்று கேட்டார்கள் ரொட்டி கிடைக்காவிட்டால் கேக்கு சாப்பிடுங்கள் என்று அறியாமையால் கூறினாள். அங்கிருந்த கவர்னர் ஆணவமாக புல்லை சாப்பிடுங்கள் என்றுகூறினான்! கடைசியில் மக்கள் அவர்களைத் தூக்கி விட்டார்கள். இதை நான் சட்டமன்றத்தில் கூறினேன். இந்தமாதிரி ஆணவமாகப் பேசினால் மக்களே பதிலளிப்பார்கள். புளி விலை ஏறுகிறது என்றால் விரலை வெட்டுவேன் என்று சட்டமன்றத்தில் பேசுகிறார்கள்!

அரிசிபடி 1—6-க்கு விற்கிறது குறைத்து 0—12—0-வுக்குக் கொடுங்கள் என்றால் ஆணவமாகப் பேசுகிறார்கள். இப்படிப் பேசியது மேடையிலல்ல, சட்டமன்றத்தில், அமைச்சர்கள் முன்னிலையில் பொறுப்பின்றி பேசினார்கள். இதை எண்ணிப் பாருங்கள். இப்படிப் பேசினால் மந்திரிகளுக்குத்தான் பெயர் கெடும். மக்களும் கொதித்தெழுவார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் பேசும்போது பேசினார், அமைச்சர்கள் வடநாட்டவர்களுக்கு அடிமையாக இருக்கிறார்கள், அவர்களுக்குஉரிமை இல்லை. மக்களுடைய குறைகளை நீக்க உரிமையற்று இங்கு என்ன செய்கிறீர்கள் என்றார். ரசாயனசாலையைவைக்கக் கேட்டிருக்கிறோம். தொழிற் கல்வி சாலை கட்டக் கேட்டிருக்கிறோம். பொருளாதார ஆராய்ச்சிக் கூடம் கட்டக் கேட்டிருக்கிறோம் என்று பேசி தென்னாட்டை வடவர்களிடம் அடிமையாக்காதீர்கள். தென்னாட்டிற்கு நன்மை செய்யமுடியாமல் அமைச்சர்கள் இங்குஎன்னதான் செய்கிறீர்கள் என்று அண்ணா கேட்டார். அதற்கு மந்திரி சுப்பிரமணியம் ஆணவமாகமேஜை மீதிருந்த பைல்களைப் பார்த்துக் கொண்டே "நாங்கள்பைல்களைப் பார்க்கிறோம்" என்று கூறினார்! அங்கத்தினர்கள் மக்கள் குறைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது தேவையில்லாத வேலையை செய்துகொண்டிருக்கிறீர்களே! சர்க்கார்பைல்கள் ரகசியமாக இருக்க வேண்டிய பைல்கள் இப்படி அம்பலமாக்கிக் கொண்டிருக்கிறீர்களே இது சரியா என்று கேட்டார்.

மந்திரி பக்தவத்சலம் கவர்னர் பேச்சைப்பற்றிப் பேசும்போது நான் தி. மு. க தலைவர் பேசும்போது இல்லை, சுருக்கெழுத்துக்காரரை அவர் பேச்சு முழுதும் எடுத்துக் கொடுக்கும்படி கூறினேன். கொடுத்தார்கள் படித்தேன்! அந்தப் பேச்சில் ஒன்றுமில்லை! எல்லாம் பழையப் பேச்சுதான்பழைய பல்லவிதான் படி இருக்கிறார்,

கவர்னர் சட்டமன்றத்தில் மூன்று முறை பேசி இருக்கிறார், அதில் என்ன இருக்கிறது. அந்தப்பேச்சில் புதுமை என்னதான் இருக்கிறது. குறைகளை போக்க என்ன இருக்கிறது, அது பழைய பல்லவிதானே.

பல்லவியையே புரிந்துகொள்ளாதவர்கள், சாஹித்தியத்தை எங்கே புரிந்து கொள்ளப் போகிறார்கள் வடநாட்டு அடிமைகளாக, எடுபிடி ஆட்களாக, உரிமையற்றவர்களாக நமது அமைச்சர்கள் இருக்கிறார்கள். இதை அண்ணா அவர்கள் கேட்டால் நாங்கள் திட்டங்கள் தீட்டுகிறோம் என்று கூறுகிறார்கள். நம்மைத் திட்டங்கள்கேட்கிறார்கள்! நாம் திட்டங்களைக் கொடுத்தால் நிறைவேற்ற அருகதையற்றவர்—ஆற்றல், அதிகார மற்றவர்கள் நம்மைக் கேட்கிறார்கள், இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது, கவர்னர் உரையைப்பற்றிப்பேச! கவனர் உரையின்போது வராதவர்களுக்கு, உரிமை இல்லை என்கிறார்கள்! வந்தவர்களுக்குத்தானே உரிமை என்கிறார்கள்!

தமது தொகுதியில் பள்ளிக்கூடங்கள், ரோட்டு வசதிகள் கிணறு வசதிகள் மற்றும் பல குறைபாடுகள் இருப்பதைப் பார்க்க என்னுடன் வாருங்கள் உங்கள் ஐந்தாண்டுத்திட்ட லட்சனங்கள் நன்கு தெரியும், என்று அறை கூவினார். ஆனால் அமைச்சர்கள் மௌனமாக இருந்தார்கள்.

நமது அமைச்சர்கள் எதற்கெடுத்தாலும் புள்ளி விபரங்களைக் காட்டுகிறார்கள், புள்ளி விபரங்கள் என்பது போலித்தனமானது—புரட்டானது—மக்களை ஏமாற்றக் கூடியது.

ஒரு சமயத்தில் தென்னாப்ரிக்க பிரதமர் மார்சல் ஸ்மட்ஸ் தனது செயலாளரை அழைத்து, நான் பாராளுமன்றத்தில் நாளை பேசவேண்டும் அதற்குப் புள்ளி விபரம் வேண்டுமென்றார்.

அதற்குச் செயலாளர் நாளைக்குப் பேசப் போவதற்கு புள்ளி விபரம் எடுப்பதனால் 5 வருடங்களாகும், அது முடியாத காரியம் என்றார். ஆனால் ஸ்மட்ஸ் மறுநாள் பாராளுமன்றத்தில் பல புள்ளி விபரங்களை அள்ளி வீசி அழகாகப் பேசினார். இதைப் பார்த்த செயலாளர் ஆச்சரியப்பட்டு 5 வருடங்களில் தேடி எடுத்துப் பேச வேண்டியதை ஒரே நாளில் எடுத்துப் பேசியிருக்கிறீர்களே என்றார். அதற்கு ஸ்மட்ஸ் நான் காட்டிய புள்ளி விபரங்களை எதிரிகள் கண்டு பிடிக்க முடியாது. 15 வருடங்கள் தேடினாலும் கண்டு பிடிக்க முடியாது. அதனால் போலி புள்ளி விபரங்களைக் காட்டி பேசினேன் என்றார். நாங்கள் உங்களைப் பார்த்து மக்களுக்கு நன்மை பயக்கும் காரியங்கள் செய்யவில்லை—உரிமை இல்லை—நாட்டைக் காட்டிக் கொடுத்து அடிமையாக இருக்காதீர்களென்றால் எங்களிடம் போலி திட்டங்களை—போலி புள்ளி விபரங்களை காட்டி ஏமாற்றுகிறீர்கள். அதனால்தான் எங்கள் நாட்டிற்கு விடுதலை வேண்டும், நாங்களே காரியங்கள் செய்யும் உரிமை வேண்டும், அதற்காகப் பாடுபடுகின்ற எங்களுக்கு இடையில் நின்று தொல்லை கொடுக்காதீர்கள், எங்கள் நாட்டைப் பிரித்து இடையில் ஒரு கோடு போடு என்கிறோம். அதற்கு இடைஞ்சலாக நின்று தொல்லை கொடுக்காது ஒடு என்கிறோம். இது புரியாது நம்மைத் தூற்றி இழித்துப் பழித்து வருகிறார்கள். நாம் நமது கடமையைச் செய்வோம். நமது நாடு விடுதலை அடைய திராவிட நாடு நமக்கு கிடைக்க நாம் பாடுபடுவோம். அதற்கு நீங்களெல்லாம் ஆதரவு கொடுத்து எங்களை ஊக்குவிக்க வேண்டுகிறேன். நமது கழக சார்பான நாடகம் ஒன்று கோடம்பாக்கத்தில் நடக்கிறது! அதற்கு நான் போக வேண்டும்! கடைசி கட்டத்திலாவது கலந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அழைத்துப் போக நண்பரும் வந்திருக்கிறார். ஆகையால் உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். வணக்கம்.

இந்தித் திணிப்பை எதிர்த்த இதயம் நின்றது! தமிழ் அறிஞர் சோமசுந்தர பாரதியார் மறைவு!

ஆச்சாரியார் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருந்த காலத்தில்—இந்தித் திணிப்பை திணித்தபோது அதை எதிர்த்துப் போராடிய முதுபெரும் தமிழறிஞர். நாவலர் சோமசுந்தர பாரதியார் கடந்த 14ந்தேதி இரவு திடீரென்று மரணமடைந்தார்.

தமிழுக்காகவும், தமிழ் நாட்டிற்காகவும் தம் வாழ்நாளின் பெரும்பகுதியை செலவிட்டு, தியாகத்தழும்புகள்பெற்றதமிழ் அடலேறு நாவலர் பாரதியார் நம்மை விட்டுப்பிரிந்தார்!

அவரைப்பிரிந்து வாடும் அன்னாரது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம். ஆ—ர்

நடை பாதையில் வாழ்வோரின் துயர் துடைப்பதே எனது முதல் லட்சியம்!

மேயர் அப்துல்காதர் உறுதி மொழி !



சென்னை 42-வது வட்ட தி. மு. க. சார்பில் திரு. நீல நாராயணன் தலைமையில் நடைபெற்ற மேயர் பாராட்டுக் கூட்டத்திலும், சிந்தப்பா நிதியளிப்பு கூட்டத்திலும் 12-12-59-ம் தேதி சென்னை மேயர் திரு. எம். எஸ். அப்துல் காதர் பேசியதாவது:

தலைவர் அவர்களே! தாய்மார்களே! நண்பர்களே! நமது கழகத்தில் ஈடுபாடு கொண்டு உழைத்த மாவீரன் சிந்தப்பா குடும்பத்திற்கு நிதி அளிக்கும் இந்தக் கூட்டத்தில் என்னையும், துணை மேயரையும் பாராட்டுவதற்கு நன்றி கூறிக் கொள்கிறேன்! எனக்குப் பேச வாய்ப்பு கிடைத்தமைக்கு வணக்கம் தெரிவித்துக் கொள்கிறேன்!

சென்னை நகர மாமன்றத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற எனது திட்டங்கள் என்ன என்று தெரிந்து கொள்ள ஆசையுள்ளவர்களாக இருப்பீர்கள்!

நான் வெகு நாட்களாகவே ஆவல் கொண்டிருந்த எண்ணமானது, குடிசைப்பகுதிகளில் வாழ்வோருக்கும், நடைபாதையில் வாழ்வோருக்கு ஏதாவதுசெய்ய வேண்டுமென்ற எண்ணம் நிறைவேற முயற்சிகள் செய்து வருகிறேன்! குடிசையில் வாழ்வோர் வளமோடும், நல்ல முறையிலும் வாழ்வதற்கான திட்டங்களைத் தீட்டி வருகிறேன்! அதற்காக அதிகாரிகளோடும் பல கட்சித் தலைவர்களோடும் கலந்து பேசி வருகிறேன்!

நான் பதவிக்கு வுந்ததும் பல குடிசைப் பகுதிகளையும் நடைபாதையில் வாழ்வோரையும் பார்த்தேன்!

நமது நகரில் ஏறக்குறைய 276 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன! அதில் 40 பகுதிகளில் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன! இந்தப் பகுதிகளில் வாழ்வோர் மிகக் கேவலமாகவும்—வருந்தக் கூடிய நிலையிலும் வாழ்கிறார்கள்! அதைப் பார்த்து நான் வருந்தினேன்!

நான் நகர மன்ற அதிகாரிகளை அழைத்து இந்தப் பகுதிகளில் வாழ்வோரின் நிலையை மாற்ற திட்டமிட்டிருக்கிறேன்! என்னுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும், நான் பார்வையிடும் இடங்கட்கு வந்து அவைகளை செப்பனிடும் வேலைக்கு பாடுபட வேண்டுமென்றும் கேட்டிருக்கிறேன்.

சமீபத்தில் பெய்த மழையால் தென் சென்னை, மேற்கு மாம்பலம், தெற்கு மாம்பலம், பகுதிகளில் நீர் நிறைந்து தேங்கி இருந்தது! அதை எல்லாம் மோட்டார் இயந்திரங்களைக் கொண்டு நீரை எடுக்கச் செய்திருக்கிறேன்! இதனால் அங்கு கொசுக்கள் பெருகி பல வியாதிகள் உண்டாகிறது! இதையெல்லாம் போக்குவதற்கான ஏற்பாடுகள் மிகத் தீவிரமாக செய்து வருகிறேன்!

1909-ம் ஆண்டு சென்னை நகர சபையின் ஜனத்தொகை 8¼ லட்சம். இப்பொழுது 20 லட்சமாக ஜனத் தொகை பெருகி இருக்கிறது! 3¼ லட்சம் ஜனத் தொகைக்கு ஏற்ப தண்ணீர் திட்டங்களும் வடிகால் திட்டங்களும் இருக்கிறது. 15 ஆண்டுகள் நகர சபையை நிர்வகித்த கட்சியார் அதைப் பற்றி கவலை எடுத்துக் கொள்ளவில்லை! ஜனத் தொகை பெருகப் பெருக மக்கள் அவதிப்படுகிறார்கள். 6 லட்சம் பேர்கள் அனுபவிக்கக்கூடிய தண்ணீர் திட்டத்தை 20 லட்சம் பேர்கள் உபயோகப்படுத்துவதென்றால் எப்படிமுடியும்? இது பற்றி நகர சபை கமிஷனரைக் கேட்டேன், இதுபற்றி ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை! குறைந்த ஜனத்தொகையின்போது ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை வைத்து அதிக ஜனத்தொகை மக்கள் எப்படி உபயோகிக்க முடியும், உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறேன்!

இதன் பிறகுதான் வடசென்னையில் ஒரு தண்ணீர் தேக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது, இதனால் ராயபுரம், வண்ணாரப்பேட்டை மக்கள் தண்ணீர் தட்டுப்பாடின்றி உபயோகிக்க வசதிகள் ஏற்படும்! அதுபோலவே தென் சென்னைப் பகுதிகளிலும் ஏற்படுத்தி அப்பகுதி மக்கள் கஷ்டமின்றி உபயோகிக்கும்படியான ஏற்பாடுகள் செய்யமுயற்சிகள் செய்ய முடிவு செய்திருக்கிறோம்!

சென்னை சர்க்காரிடம் நகர சபைக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்காக 20 லட்சம் மான்யம் கேட்டோம்! அவர்கள் 20 லட்சம் ரூபாய் மான்யம் கொடுக்க முடியாது! வேண்டுமானால் 10 லட்சம் கடனாகவும், 10 லட்சம் மான்யமாகவும் கொடுப்பதாகக் கூறியிருக்கிறார்கள்! நான் பத்து லட்சம் மான்யமாகக் கொடுப்பதை முதலில் கொடுங்கள், கடனாகக் கொடுப்பதைப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம்! ரெவினியூ வருமானத்திலிருந்து 10 லட்சம் சேர்த்து எங்கள் காலத்திலேயே மக்கள் வசதிகளுக்கான அபிவிருத்திகள் செய்ய வேண்டும். என்று கேட்டிருக்கிறோம் மற்றும் நகரத்தில் பிற்போக்குப் பகுதிகளில் வடிகால் திட்டங்கள் ஏற்படுவதற்கும் ஏற்பாடுகள்செய்து அதற்கான முயற்சிகள் செய்து வருகிறேன்.

குடிசைகளில்வாழும்மக்களின் குறைகளைப்போக்கி அவர்கள் நலமாக வாழ்வதற்கான திட்டங்களைப் போட்டு உடனடியான ஏற்பாடுகள் செய்வதற்காக இம் மாதம் 16-ம் தேதி ஒரு மாநாடு

12 ம் பக்கம் பார்க்க

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடு விடுதலை பெறுவதற்கு பல மார்க்கங்கள் உண்டு! ஒரு நாட்டை புரட்சியின் மூலமாக விடுவிக்கலாம்! ரத்தம் சிந்தி மீட்கலாம்! அந்த முறை இந்த காலத்திற்கு ஏற்றதல்ல!

இரண்டாவது முறை அதிகாரத்தைப் பிடித்து ஒரு நாட்டை மீட்கும் பணியில் இறங்கலாம்! இந்த முறைதான் நாகரீகமான முறை, இந்த காலத்திற்கும் ஏற்ற முறை!

எந்த முறையை கையாள வேண்டுமானாலும் முதலில் மக்கள் மனதை பக்குவப் படுத்த வேண்டும்! தமிழகத்து மக்களை நாம் பக்குவப்படுத்தி யிருக்கிறோம்! என்றாலும் இன்னும் பலரை நாம் பக்குவப் படுத்த வேண்டும்! அதற்கான பணிகளை உடனே துவங்க வேண்டும்!

திராவிட நாடு விடுதலைப் போராட்டத்தை துவக்க வேண்டிய நல்ல சந்தர்ப்பம் இன்னும் இரண்டே இரண்டு ஆண்டுகளில் நமக்கு வர இருக்கிறது!

1962-ம் ஆண்டு நம்முடைய நிலை நிச்சயமாக நிர்ணயமாக வேண்டும்! வருகிற பொதுத் தேர்தலில் நாம் ஒரு நிலையான இடத்தைப் பெற்று நம்முடைய போராட்—சக்தியைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்!

எத்தனைக் கூட்டங்கள் போட்டோம் என்பதை விட, எத்தனை கலரில் போஸ்டர்கள் அச்சிட்டோம் என்பதை விட—எத்தனை பேருக்கு விடுதலை உணர்ச்சியை ஊட்டினோம் என்பதை தினம் தினம் டையரி வைத்து எழுதி வாருங்கள்!

“டிசம்பர் மாதம் இருபதாம் தேதி, குப்புசாமியோடு வாதாடினோம். தென்னாடு வேறு, வட நாடு வேறு என்பதை தெளிவாக எடுத்துச் சொன்னோம்—முதல் நாள் பலன் கிடைக்கவில்லை! மறுநாள் சென்றோம், நேரு போதையை கொஞ்சம் தணித்தோம். தாய் நாட்டுப் பாசத்தை ஊட்டினோம்! குப்புசாமி மனம் தெளிவடைந்தது—கையிலே கொடி யேந்தினார்! “1962 வரட்டும் வட நாட்டு தாசர்களை ஒரு கை பார்க்கிறோம்” என்று முழங்கினார்! அடுத்து நாராயணசாமியைப் பார்த்தோம், அதற்கடுத்து கோவிந்தசாமியைப் பார்த்தோம்! எல்லோரும் விடுதலை வீரர்களாக மாறினார்கள்” என்று ஒவ்வொரு கழகத் தொண்டர்களும் டையரி வைத்து குறிப்பார்களானால்—அதிகாரத்தில் அமர்ந்து கேலி புரியும் சிலரின் வாய் அடங்கிவிடும்!

கழகத் தோழர்கள் உடனடியாக இதைச் செய்ய வேண்டும்! எதிரிகள் நம்மைத் தாக்கிப் பேசுகிறார்கள் என்பதற்கு ஆத்திரப்படுவதை விட, திருப்பித் தாக்கிப் பேசுவதை விட நமது அறிஞர் அண்ணா குறிப்பிட்டது போல் உண்டி வையுங்கள்! தினம், தினம் ஒரு பைசா போடுங்கள்! அந்த ஒரு பைசா அவர்களுக்கு நல்ல பதிலை அளிக்கும்!

நீங்கள் போடுகிற ஒவ்வொரு பைசாவும், எதிரிகளின் அதிகார எலும்பு ஒவ்வொன்றையும் தனித் தனியாக ஒடித்து எடுக்கும் என்பதை மறவாதீர்கள்!

1962-ஆமாம்! இன்னும் இரண்டே இரண்டு ஆண்டில் 1962 வருகிறது! யார் எதைச் சொன்னாலும், எப்படித் திட்டினாலும் “1961, 1962” என்ற வார்த்தை ஒன்றை மட்டும் பதிலாகச் சொல்லி பணிபுரிய புறப்படுங்கள்!

Registered as a Newspaper in CEYLON
Regd No M. 7074 விலை 16 காசு **MALAIMANI** Phone No. 83285

ராஜாஜி விதைவிதைக்கிருர் அதன்பலனை அனுபவிக்கப் போகிறவர் அவரல்ல, நாம் தான் !

அண்ணு பேச்சு

9-ம் பக்கத் தொடர்ச்சி

அவர் விதைக்கிருர், அறுக்கப் போகிறவர் நாம் தானே தவிர-அவரல்ல !

மோதிக் கொள்ளவில்லையே தவிர அவசரமாக ஆலிங்கனம் செய்து கொள்ளும் பழக்கம் எனக்கில்லை. என்று கூறினேன்.

இவர்கள் கேரளத்தில் முஸ்லிம்களோடு அவசரமாக ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். இங்கு பிரஜா சோஷலிஸ்ட்காரர்களைத் தாக்கிப் பேசி விட்டு அங்கே பி: சோக்களுடன் ஒப்பந்தம்செய்துகொண்டார்கள். அந்த அவசர ஆலிங்கனம் நாம் செய்து கொள்ளவில்லை.

ஒருஆளைப் பார்த்தால் வேண்டுகிற போது அந்த ஆளைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுக்க வேண்டுமென்றே. வேண்டாத போது எட்டிஉதைக்க வேண்டும் என்று விதியா இருக்கிறது?

கந்தனும் முருகனும் நண்பர்களாக இருக்கும் போது ஒருவருக்கொருவர் சந்தித்தால், சௌக்கியமா என்று கேட்டுக் கொள்வார்கள், கந்தனுக்கும் முருகனுக்கும் சண்டை யென்ருல் மீசையை முறுக்கிக் கொண்டு பார்க்கிறேன் ஒரு கை என்பான். கந்தனும் முருகனும் நண்பர்களாக இருந்தால் கந்தன் முருகனை காப்பி சாப்பிடலாம் என்று அழைப்பான். இதே போன்றது தான் அரசியல் கட்சிகளும்!

அடுத்த தேர்தலில் சுதந்திராக் கட்சியும், காங்கிரசும் தான் மோதிக் கொள்ளப் போகின்றன, சுதந்திராக் கட்சியினுல் காங்கிரசுக்குத் தான் பலவீனம் ஏற்பட்டு நமக்கு அதிக பலம் கிடைக்கலாம் என்று கூறினேனே தவிர கிடைக்கும் என்று கூறவில்லை ! இப்படிச் சொல்வதற்கு காரணம் அதிக பலம் கிடைக்கச் செய்வதற்கான பொறுப்பு உங்களிடத்திலே இருக்கிறது.

அதற்காக நாம் அனைவரும் பாடுபட்டு அதற்காக மக்களின் பலத்தைத் திரட்டி, அடுத்த பொதுத் தேர்தலுக்குள் அதற்கு வேண்டிய பணத்தையும் திரட்டினுல் தான் நமக்கு பலம் ஏற்படலாம்.

பொருள் கொடுக்க வசதியுள்ளோர் பொருளுதவி செய்தும், அறிவுத் திறனுடையோர் கொள்கையை விளக்குவதற்கு அறிவுப் பணி செய்தும். உழைக்கின்றவர். உழைப்பை தந்தும் பணத்தை சேமித்து வைத்து வெற்றி பெற பாடுபட்டால், வெற்றி பெறுவதற்கான நல் வாய்ப்பை உண்டாக்கித் தந்தால் காங்கிரஸ் கல கலத்துப் போகும்.

இன்றைய தினம் காங்கிரஸ் கட்சியிலே பல்வேறு கருத்துக் கொண்டவர்களாக இருக்கிருர்கள்,

தஞ்சாவூரிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் மணி என்பவர் சட்ட மன்றத்தில் பேசும் போதும் மடாதிபதிகளுக்கு ஏன் இவ்வளவு சொத்து? அக்கிரமக்காரர்களுக்கு. ஏன் இவ்வளவு நிலங்கள்? அவர்கள் வைத்திருக்கும் சொத்து யாருக்கு பயன்படுகிறது? நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுவது போல, ஒவ்வொரு மடாதிபதியும் இவ்வளவு தான் நிலம் வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று உச்ச வரம்பு கட்டுங்கள் என்று கூறினுர்,

அவர் சுயமரியாதைக்காரர் அல்ல. இப்படிப் பேசியது பற்றி மிகவும் சந்தோஷம். நாம் சொல்வதைப்போல் அவர் பேசினுர் இவரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் தான்!

மதுரையிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கரன் என்பவர் சட்ட மன்றத்தில் பேசும் போது, 'நீங்கள், மிராசுதரர்கள்—மிட்டாதாரர்கள் நிலத்திற்கு வேண்டுமானுல் உச்ச வரம்பு கட்டுங்கள், ஆனுல் கோயில் சொத்துக்களை மட்டும், தர்மஸ்தாபனங்களின் சொத்துக்களை மட்டும் பறித்துக்கொள்ளாதீர்கள், கை வைக்காதீர்கள் என்று கூறுகிற இவரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் தான்!

கோயில் சொத்துக்களுக்கு உச்சவரம்பு கட்டுங்கள் என்று கூறிய மணியும் காங்கிரஸ்காரர் தான் ! கோயில் சொத்துக்களுக்கு உச்சவரம்பு கட்டாதீர்கள். ஆண்டவன் தலைமீது கை வைக்காதீர்கள் என்று கூறிய சங்கரனும் காங்கிரஸ் கட்சி தான்!

இன்னென்றையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மற்ருெரு தொகுதியிலிருந்து வந்த உறுப்பினர் தேனி தியாகராசன் என்பவர், கவர்னர்உரையின்மீது பேசும்போது, அரிசி விலையை குறைக்க வேண்டும், ரூபாய்க்கு மூன்று படி அரிசி வேண்டும்' என்று என் தொகுதியில் வந்து யாராவது பேசினுல் அவர்களது விரலை வெட்டி விடுவேன் என்ருர். இவரும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்தான் !

கோயில் சொத்துக்களுக்கு உச்சவரம்பு கட்ட வேண்டுமென்று கூறியவர் காங்கிரஸ்காரர்!

கோயில் சொத்துக்களை பறிக்காதீர்கள் என்று கூறுவதும் காங்கிரஸ்காரா!

விலைவாசி குறைய வேண்டுமென்று கூறினுல் விரலை வெட்டி விடுவேன் என்று மிரட்டுவதும் காங்கிரஸ்காரர்தான். இதற்கு பெயர் கட்சியாம் ! இதற்கு கட்டுப்பாடு என்று பெயராம்!

இன்னும் இரண்டாண்டில் இந்த கருத்து வேற்றுமை இன்னமும் விரிவடைந்து வெளியே தெரியும்!

பத்திரிகையை கூர்ந்து கவனித்தால் புரியும். ஊர், உலகம் முழுவதும் நிலத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டுமென்று பேசி வருவது! நேரு கூறுகிருர் நிலத்திற்கு உச்சவரம்பு கட்ட வேண்டுமென்று ! சென்னை மாநில முதலமைச்சர் காமராசர் கூறுகிருர், நிலத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டுமென்று ! இந்தத் தொகுதியிலே தேர்ந்தெடுத்து அனுப்பிய அனந்த நாயகி அம்மையார் மட்ட வரம்பு கட்ட வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்தார். முறையற்ற தன்மையில் தீர்மானம் கொண்டு வந்ததால் வாபஸ் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

உச்ச வரம்பு கட்ட வேண்டுமென்று கூறுகிறவர்களும் காங்கிரஸ்!

மட்ட வரம்பு கட்ட வேண்டுமென்று கூறுகின்றவர்களும் காங்கிரஸ்!

அமெரிக்காவிடம் கடன் வாங்கக்கூடாது என்று சொன்னதும் காங்கிரஸ்!

அமெரிக்காவின் திக்கு நோக்கி கும்பிடுவதும் இதே காங்கிரஸ்!

இதே காங்கிரஸ்காரர்கள் தான் அன்று சீனி-இந்தி பாய் பாய் என்ருர்கள்.

இப்போது இதே காங்கிரஸ் காரர்கள் சோர்-சோர் என்கிருர்கள்!

ஆகவே காங்கிரஸ் கட்சி இந்த லட்சணத்தில் போய்க்கொண்டிருக்கிறது!

நமது கழகத்தில் ஈடுபாடு கொண்டிருக்கும் தோழர்கள் கட்டுப்பாடுடன் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காரணம், நாம் எந்த லட்சியத்தை வைத்திருக்கிருேமோ அந்த நாட்டுப் பிரிவினைத் திட்டம் வலிவு பெற வேண்டும். ஒன்றுக்கு பத்தாக வளர வேண்டும். பத்து நூருக ஓங்கி வளரவேண்டும். நமது கொள்கையை தெரியாதவர்களுக்கு தெரிவிக்கவும், உணராதவர்கள் உணரவும், அறியாதவர்களுக்கு அறிவிக்கவும் மக்களிடையே பரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எம். ஜி. ஆர். மன்றத்தினர் நமது கொள்கையை — லட்சியத்தை விளக்க சிறு சிறு வெளியீடுகள் வெளியிட்டு கழகத்திற்கு வலிவைத் தேடித் தருகின்ற பணியிலே ஈடுபட வேண்டுமென்று நண்பர்களை கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டியிருக்கிறேன். அதில் நகர சபை அதிகாரிகளையும் பல கட்சித் தலைவர்களையும் கலந்து கொள்ளும்படி அழைத்திருக்கிறேன்.

அதுபோலவே நடைபாதை வாழ்வோர்களுக்கு என்ன வசதிகள் செய்வது, அவர்கள் வாழ்வு நலம்பெற என்ன வழிகள் செய்வது என்பதுபற்றி யோசிக்க இம்மாதம் 21-ம் தேதி ஒரு மாநாடு கூட்டியிருக்கிறேன். மற்றும் நம் நகரத்தில் சுகாதார ஏற்பாடுகள் மிகவும் மோசமாக இருக்கிறது. அதை அபிவிருத்தி செய்யவேண்டிய கவனம் செலுத்தி அதற்கான முயற்சிகள் செய்து வருகிறேன். இவைகள் எல்லாம் என காலத்திலேயே செய்யவேண்டுமென்று தீவிரமான ஏற்பாடுகள் செய்து பல கட்சிகள், அதிகாரிகள் ஒத்துழைப்பு பெற்றுவருகிறேன. நீங்களும் என து முயற்சிகளிலஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதார விஷயங்களில் நகர சபை கவனம் செலுத்துவதற்கு நீங்கள் ஒத்துழைத்தால்தான் அது வெற்றியளிக்கும். நான் மிகவும் வேதனையோடுகூறுகிறேன், நமது தோழர்களும் சுகாதார வீதிகளுக்கு விரோதமான காரியங்கள் செய்கிருர்கள், உதாரணமாக, இந்தக்கூட்டம் முடிந்ததும் கும்பலாகச் சென்று மக்கள் நடமாடுமிடங்களில் சிறுநீர் கழிக்கிறீர்கள், இதுசரிதானு என்றுயோசியுங்கள் நாமேஅப்படிச் செய்தால் மற்றவர்களை எப்படி திருத்த முடியும், ஆகவே இம் மாதிரி விஷயங்களில் நாம் முன் மாதிரியாக நடக்க வேண்டும்,

சென்னை நகரில் சர்க்காருக்கு பஸ்போக்கு வரவு மூலம் 60 லட்சம் ரூபாய் வருகிறது. ரோடுகளில் போக்குவரத்துகள் நன்ருகப் போவதற்காக தார்போட்டு நல்ல வசதிகள் செய்து மேடு பள்ளங்கள் நீக்கித் தருகிருேம். அவர்கள் நகரசபைக்குத் தருவது மூனேகால் லட்சம் ரூபாய் ஆனுல் நகரசபை தனதுகார்கள், லாரிகளுக்காக சர்க்காருக்குக் கொடுப்பது லட்சம், இதைப் பார்த்தால் நகரசபைக்குக் கொடுப்பது 1 லட்சம் தான்.

ஆகவே போக்குவரத்துக்காக அதிகம் சர்க்கார் கொடுக்க வேண்டுமென்று கேட்டு வருகிருேம்,

நகரமக்கள் சுகமாக வாழ்ந்து நல்ல முறையில் இருப்பதற்கான பல திட்டங்கள் தீட்டியிருக்கிறேன் ஆக்க வேலையில் ஈடுபடப் போகிறேன் உங்கள் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன்.

எனக்கும் துணை மேயருக்கும் பாராட்டு அளித்தற்காக நன்றி செலுத்துகிறேன்! வணக்கம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5.
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை